374

# மலாயா
# தேசிய வாசகம்

ஐந்தாம் வகுப்பு



374
4.62
MADRAS RECORD OFFICE
T3
O31,6
N62
139675

...த்தகசாலை கோலாலம்பூர்.

# மலாயா தேசிய வாசகம்

## ஐந்தாம் வகுப்பு

ஆசிரியர்:

அ. இராமநாதன்

(ஆட்சி முறை, செந்தமிழ்ப் பயிற்சி நூல், பழமொழி விளக்கம் முதலிய நூல்களின் ஆசிரியர்)

விற்பனை உரிமை:

கிருஷ்ண புத்தகசாலை

25, பத்து ரோடு, கோலாலம்பூர்

பதிப்புரிமை: அசோக் அண்ட் கோ

விலை $. 1.25

முதற் பதிப்பு: 1961.
இரண்டாம் பதிப்பு: 1962.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008
139675

The Progressive Printers, Madras-1.

# முன்னுரை

அன்பு கடவுள் என்று சொல்லும்
அமுத மான தமிழ்மொழி
இன்பமுண்டு; துன்பமில்லை
என்று சொல்லுந் தமிழ்மொழி
பொன்பரவுங் காலை போலப்
புதுமை யான தமிழ்மொழி
பண்பரவுங் கலையுலகிற்
பழமை யான தமிழ்மொழி
வாழ்க நம் தமிழ்மொழி—நீடு
வாழ்க நம் தாய்மொழி
வாழ்கவே!!

தமிழர் உயிர் நிலை தமிழ்; தமிழ் இல்லாது தமிழினம் இல்லை. தமிழ் உலகின் முன்மொழி, தொன்மொழி, தேன்மொழி. எங்கே இருந்தாலும், தமிழர் தமிழரே; தமிழே பேசுக.

மலாய் நாட்டில் இலட்சக்கணக்கான தமிழர் இருக்கிறர்கள். தமிழ்ப்பள்ளிக்கூடங்களும் ஊர் தோறும் உள்ளன. தமிழுக்கு இங்கே தக்க இடம் உண்டு. நாட்டு மொழி மலாய்; வீட்டு மொழி தமிழ்; இரண்டும் வளரவேண்டும்.

தமிழ்க்குழந்தைகள் எளிதாகத் தமிழ் கற்கவே இந்தப்பாடநூல்வரிசை எழுதப் பெற்றுள்ளது. நடை எளிது; பாடப்பொருள் அறிவை வளர்ப்பது; தமிழ் நீரோட்டம் போன்றது. அரசாங்கம் வகுத்த முறைப்படி தொகுத்த இப்பாடநூல் வரிசை, மலாய்ப் பிள்ளைகள் மகிழ்வுடன் ஓதத் தக்கது. இப்பாடத் தொகுதியைத் தொகுத்தளித்த,

ஏ.ப்போ.அ. இராமநாதன் செய்த தமிழ்ப்பணி போற்றத் தக்கது. இன்பம் சூழ்க! எந்தாய் வாழ்க!

சுத்த சமாஜ குருநாதர்
பெடாலிங்
கோலாலம்பூர்
1-9-61

சுத்தானந்தபாரதி

# முகவுரை

தேசிய வாசகம் என்னும் பாட வரிசையில் இஃது ஐந்தாம் வகுப்பிற்குரிய ஐந்தாம் புத்தகமாகும். இப் பாட நூல் மலாயா அரசியலாரின் கல்விக் கொள்கைக்கு இணங்கவும் தன் பெயருக்கு ஏற்பவும் பெரும்பாலும் மலாயாவைப் பற்றிய செய்திகளையே பாடப் பொருள் களாகக் கொண்டு, மலாயா நாட்டைப் பற்றியும், மொழியைப் பற்றியும் வளர்க்கும் முறையில் எழுதப்பட்டுள்ளது.

மாணவ மாணவியரின் பொது அறிவை வளர்ப்பதற்கான புதிய பாடங்களும் போதிய அளவு இடம் பெற்றுள்ளன.

மாணவ மாணவியர்க்கும், ஆசிரிய மாணவர்க்கும், தமிழ்ப் பாடம் போதித்துப் பெற்ற அநுபவ அடிப்படையின் மீது, திருத்தமான தமிழ் நடையில் இப் பாட நூல் வரிசை உருவாக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாசக நூல் வரிசை சிறப்புற அமைதற்கேற்ற அரிய ஆலோசனைகளைக் கூறியும், பாடங்களைப் பார்வையிட்டு வேண்டிய திருத்தங்களைச் செய்தும் உதவிய இந்தியப் பள்ளிகளின் அமைப்பாளர்களுக்கும் என் பணிவார்ந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

பாடங்களைத் தேர்ந்தெடுப்பதிலும், அவற்றைக் கோவை பட அமைப்பதிலும் உறுதுணை புரிந்த ஆசிரியர் திரு. மா. பொன்னுசாமி அவர்களுக்கும் என் நன்றி உரியது.

இவ்வாசக வரிசையைத் தங்களின் அரிய வெளியீடாக மலரச் செய்த கோலாலம்பூர் அசோக் அண்டு கம்பெனியார் அவர்களுக்கும், இதனை எழிலுற அச்சிட்டுக் கொடுத்த புரோகரசிவ் அச்சகத்தாருக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நூலின் வளர்ச்சிக்கான திருத்தங்கள் நன்றியறிதலோடு ஏற்றுக் கொள்ளப்படும்.

அ. இராமநாதன்.

# பதிப்புரை

ஆரம்பப் பாடசாலைகளுக்கு வாசக புத்தகம் எழுதுவ தென்பது எல்லோராலும் முடியக்கூடிய காரியமன்று. "மலாயா தேசிய வாசகம்" என்னும் இப் பாட வரிசை நூலை எழுதியுள்ள அ. இராமநாதன் பெரும் பட்டதாரி யல்லர். ஆனால் மலைநாட்டிலுள்ள தமிழ்ப் பள்ளிகளில் பல ஆண்டுகளாக ஆசிரியராகப் பணியாற்றிப் பல வகுப்பு களுக்குப் பாடம் நடத்தி, அன்றைய நிலையிலிருந்து இன்றைய நிலை வரையிலுமுள்ள பிள்ளைகளின் மன நிலை யையும் கல்வித்தரத்தையும் அறிந்துள்ளதோடு, சில ஆண்டுகளாகப் போதனுமுறை வகுப்புகளுக்கும் தமிழ்ப் பாடம் நடத்தி வருவதால் வருங்கால ஆசிரியர்களிடமுள்ள இலக்கண, இலக்கியத் திறமைகளையும் நன்கு தெரிந்து கொண்டுள்ளவர். இவ்விரு அனுபவத்தையும் வைத்து, இன்றைய பள்ளிப் பிள்ளைகளின் தமிழ்ப் புலமையை விருத்தி செய்யும் வகையிலும், வருங்காலத்தில் இந்நாட்டில் நம் தாய்மொழி, பிற இன மொழிகளுடன் சம உரிமை பெற்று விளங்க வேண்டுமென்ற குறிக்கோளுடனும் இப் பாட வரிசை நூலை எழுதியுள்ளார். ஆசிரியர் அவர்களின் தமிழ்ப் புலமையை அவரின் செந்தமிழ்ப் பயிற்சி நூல்களின் மூலம் ஆசிரியர் குழாம் நன்கு அறியும்.

"மலாயா தேசிய வாசகம்" என்னும் இப் பாடநூல் வரிசைக்குப் பாடங்கள் எழுதும்பொழுது, வருங்காலத்தில் பிள்ளைகள் பாடங்களைப் புரிந்துகொண்டு ஆர்வத்துடன் படிக்கவேண்டும் என்ற அவாவாலும், போதிக்கும் ஆசிரியர் கள் எவ்வளவு தூரம் விளக்கிக் கூறிப் போதிக்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும் ஒவ்வொரு பாடத்தையும் எழுதி வகுப்புகளில் போதித்துப் பார்த்து, அவற்றுள் எவ்வெவற்றை எளிதாக்க வேண்டும், எங்கெந்த வகுப்புகளில் எந்த அளவு இலக்கண இலக்கியங்களைப் புகுத்த வேண்டும் என்பதை நன்கு அறிந்து, அதைத்

திருத்தி அமைத்து அதன் பிறகு அவருக்குத் தெரிந்த ஆசிரியர் குழாமுடன் அப் பாடங்களை வைத்து விவாதித்து இவற்றைப் பாடமாக்கலாம் என்று அவர்களின் ஒப்புதலும் கிடைத்த பிறகே புத்தகங்களை அச்சிடக் கொடுத்தார்.

இதுவரையிலும் ஒரு சில வாசக புத்தகங்கள் வெளியாகி யிருக்கின்றன. அவையினும் சிறந்து விளங்க வேண்டு மென்ற காரணத்தால் நீண்ட நாளாக அயராத உழைப்பின் மீது ஆசிரியர் பலரின் உதவிகொண்டும், இந்தியக் கல்வி இலாகா கண்காணிப்பாளர் மேற்பார்வையினுலும் சிறந்த முறையில் இம் "மலாயா தேசிய வாசகத்தை" உருவாக்கி யுள்ளார். அதை நாங்களும், பல பதிப்புகள் வெளி வந்து கொண்டிருக்கும் இத் தருணத்தில் போற்றத்தகும் புது முறையில் அச்சிட்டுள்ளோம். இதுவரையிலும் இம்மாதிரி வாசக புத்தகம் இம் மலைநாட்டில் வெளியானதில்லை என் பதைப் புத்தகங்களைக் கண்ணுறும் எவரும் ஒப்புக் கொள் வார்களென்பதில் ஐயமில்லை.

பள்ளிப் பிள்ளைகள் விரும்பிப் படிக்கக் கூடிய வகை யிலும், ஆசிரியர்கள் அக்கறையுடன் போதிக்க வேண்டு மென்ற கருத்திலும் சிறந்த முறையில் எழுதப்பட்டுள்ள "மலாயா தேசிய வாசகம்" என்னும் இந் நூல், எங்கள் பதிப்பாக வெளிவருவதில் பெருமை அடைகின்ருேம்.

புதிய பாடத் திட்டப்படி எழுதி வெளியிட்டுள்ள எங்களின் பல வெளியீடுகளையும் ஆதரித்து, ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் கல்வி இலாகா அதிகாரிகளும், ஆசிரியப் பெருந்தகைகளும், வியாபாரப் பெருமக்களும் இப் புத்தகங்களையும் ஆதரிக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிருேம்.

வணக்கம்.

கோலாலம்பூர்,
25-8-61.

அசோக் அண்ட் கம்பெனியார்.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தாமரை | ... | 1 |
| 2. | விரைவாக வாசித்தல் | ... | 4 |
| 3. | எருமை | ... | 7 |
| 4. | மலாயாக் காடுகள் | ... | 11 |
| 5. | அறிவியலும் அதன் பயன்களும் | ... | 16 |
| 6. | கடார வெற்றி | ... | 21 |
| 7. | காகம் | ... | 25 |
| 8. | பொங்கற் பண்டிகை | ... | 29 |
| 9. | புலி | ... | 33 |
| 10. | நகர சபையும் பொது மக்களும் | ... | 36 |
| 11. | நோன்புப் பெருநாள் | ... | 40 |
| 12. | வானவில் | ... | 43 |
| 13. | மூக்குக் கண்ணுடி | ... | 48 |
| 14. | வதந்தி | ... | 51 |
| 15. | மலாயாவின் பாங்குகள் | ... | 54 |
| 16. | எரிமலைகள் | ... | 61 |
| 17. | மழையும் அதன் பயனும் | ... | 65 |
| 18. | தீ மிதி விழா | ... | 68 |
| 19. | குடை பேசுகிறது | ... | 72 |
| 20. | மனிதரின் தோழன் | ... | 76 |
| 21. | மராமத்து இலாகா | ... | 80 |
| 22. | நாள் காட்டியின் கதை | ... | 84 |
| 23. | ஒட்டகம் | ... | 90 |
| 24. | எலியின் தந்திரம் | ... | 95 |
| 25. | பிழைக்கிற பிள்ளை (ஓரங்க நாடகம்) | ... | 99 |
| | செய்யுட் பகுதி | ... | 104 |

# மலாயா தேசிய கீதம்

# NEGARA - KU

## நெகாரா - கூ

NEGARA-KU TANAH TUMPAH-NYA DARAH-KU
நெகாரா-கூ தானு தும்ப்பஞு டாரா-கூ

RA'AYAT HIDUP BERSATU DAN MAJU
ராயாத் ஹீடுப் பெர்சத்து டான் மாஜு

RAHMAT BAHAGIA TUHAN KURNIAKAN
ரஹ்மட் பஹாகிய தூஹான் குர்னியாக்கான்

RAJA KITA SELAMAT BERTAKHTA
ராஜ கித்த ஸ்லாமட் பெர்த்தஹ்த்த

RAHMAT BAHAGIA TUHAN KURNIAKAN
ரஹ்மட் பஹாகிய தூஹான் குர்னியாக்கான்

RAJA KITA SELAMAT BERTAKHTA
ராஜ கித்த ஸ்லாமட் பெர்த்தஹ்த்த

## தேசிய கீதம் - தமிழாக்கம்

எங்கள் நாடு எங்கள் குருதியில் கலந்த நாடு
மக்கள் ஒன்றாய் வெற்றியோடு வாழ்க
இறைவன் அருளும் சீரும் சிறப்பும் நல்க
எங்கள் அரசர் நீடு அரசு புரிக
இறைவன் அருளும் சீரும் சிறப்பும் நல்க
எங்கள் அரசர் நீடு அரசு புரிக.

# 1. தாமரை

தாமரை இரு வகைப்படும். ஒன்று வெள்ளைத் தாமரை. மற்றொன்று சிவப்புத் தாமரை. வெள்ளைத் தாமரையை "வெண்தாமரை" என்றும், சிவப்புத் தாமரையைச் "செந்தாமரை" என்றும் சொல்வர். தாமரை, நீர் நிலைக்கு அழகு தரும். அது குளம், குட்டை, மடு, நீர் தேங்கிநிற்கும் சதுப்பு நிலங்கள் ஆகியவற்றில் வளரும். அது நீர்க்கொடி வகையைச் சேர்ந்தது; நீருக்கு அடியில் சேற்றில் வேரூன்றிப் படரும்; படர்ந்த வேர்களுக்கிடையே தடித்த கிழங்குகளைக் காணலாம்.



படம் 1. தாமரைத் தடாகம்.

தாமரைக் கொடிக்குத் தண்டு என்னும் வேறொரு பெயரும் உண்டு. தாமரைத் தண்டின் வேற்புறத்தில் முட்கள்போலச் சுணை மிகுதியாயிருக்கும். இதனாலேயே தாமரை 'முளரி' என அழைக்கப்படுகிறது. தண்டிலிருந்து நீண்ட காம்புகளுடன் இலைகள் தோன்றி, நீருக்கு மேலே நீட்டிக்கொண்டிருக்கும். தாமரை இலைகள் வட்ட வடிவமானவை. இலைகளின் உட்புறம், எண்ணெய் தடவப்பட்டுள்ளது போல வழுவழுப்புடன் விளங்கும். அதன் இலையில் நீர் ஒட்டாது. இலையின் மீது நீரைத் தெளித்தால், அது பாதரசம் போலச் சிதறி உருண்டோடும்.

தாமரைத் தண்டிலிருந்து நீண்ட காம்புகளுடன் தாமரை மொக்குகள் தோன்றும். ஒரு காம்பில் ஒரு மொக்கு மட்டுமே உண்டு. மொக்குகள் வளர்ந்து பெரிதாகி இதழ் விரியும்போது, மலர்கள் என அழைக்கப்படும். தாமரை மலரின் இதழ்கள் அடுக்கடுக்காய் அடர்ந்து நெருங்கியிருக்கும். இதழ்கள் படிப்படியாய், சிறுத்துச் சூலகத்தைச் சூழ்ந்திருக்கும். சூலகம் மஞ்சள் நிறமுடையது. சூலகத்தின் மேற்பகுதி வட்டவடிவில் தட்டையாயிருக்கும். அதனுள்ளே தாமரை வித்துக்களைக் காணலாம்.

தாமரை வித்துக்கள் நீரில் மிதக்கக் கூடியவை; தின்பதற்கு ஏற்றவை; இவை முந்திரிப்பருப்பைப் போன்ற சுவை உடையவை; உடலுக்கு வலிமை அளிப்பவை. மலர்கள் மிகுந்த அழகு வாய்ந்தவை; நறுமணமுள்ளவை; தெய்வ வழிபாட்டிற்கு ஏற்றவை. மலரை உலர்த்தித் தூள் செய்து, தேயிலையைப்போல வெந்நீரிலிட்டுச் சாறு இறக்கிப் பாலும், சருக்கரையும் கலந்து பருகலாம். இதனால் மூளை வலிவு பெறும்; அறிவு விசாலமடையும்.

தாமரைக் கிழங்கு உணவாகப் பயன்படுகின்றது. இதனைச் சீனர் மிகுதியாக உட்கொள்ளுகிறார்கள். இலை உண்கலமாகப் பயன்படும். ஆனால், மிகுந்த சூடுள்ள, உணவுப்பொருள் எதனையும் அதில் வைத்து உண்ணலாகாது. தாமரைத் தண்டிலிருந்து நூல் எடுத்துத் திரி செய்வார்கள். இந்தத் திரி, திருக்கோவில்களில் நெய் விளக்கேற்ற உதவுகின்றது.

அரவிந்தம், பங்கசம், கமலம், வநசம் என்பன தாமரையின் வேறு பெயர்களாகும். தமிழ்ப் புலவர்கள் பலர் தாமரை மலரின் அழகைச் சிறப்பித்துப் பாடி இருக்கின்றனர்.

## பயிற்சிகள் :

1. விடை கூறு :
   1. தாமரையின் வேறு பெயர்கள் யாவை ?
   2. தாமரை ஏன் முளரி என அழைக்கப்படுகின்றது ?
   3. தாமரை மலரின் பயன்கள் என்னென்ன ?
   4. தண்டு என எதைச் சொல்லலாம் ?
   5. மொக்குகள் என எவற்றைக் கூறுகிரேம் ?
   6. தாமரை இலேகளின் பயன் என்ன ?

2. சொற்றெடருக்குப் பொருந்திய சொல்லின் கீழ், கோடு இடு :
   1. தாமரை (தாவரத்திற்கு, நீர் நிலேக்கு, உலக நிலேக்கு) அழகு தரும்.
   2. செந்தாமரையின் இதழ்கள் (பசுமையாய், மஞ்சள், சிவப்பாய்) இருக்கும்.
   3. தாமரை இலே (நீண்டு, வட்டமாய், சதுரமாய்) இருக்கும்.
   4. தாமரை மலர்கள் (விளேயாடுவதற்கு, வழிபாட்டிற்கு, உண்பதற்கு) ஏற்றவை.
   5. தாமரைக்கொடி (தரையில், சேற்றில், நீரில்) வேரூன்றிப் படரும்.

3. ஒவ்வொரு சொல்லேயும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது :

   அடுக்கடுக்காய், சிதறி, நெருங்கி, வழுவழுப்பு, உண்கலமாக, வழிபாட்டிற்கு.

# 2. விரைவாக வாசித்தல்

"வாசித்தல் முழு மனிதனை உருவாக்குகிறது" என, பேக்கன் என்னும் ஆங்கிலப் பெரியார் ஒருவர் கூறியிருக்கிறார். விரைவாகவும் தெளிவாகவும் வாசித்தல் ஒருவனைச் சிறந்த அறிவாளியாக்கும். வாசித்தல் என்பது வாய் திறந்து உரக்கப் படித்தலை மட்டுமன்று; மௌனமாகப் படித்தலையும் குறிக்கும்.



படம் 2.

ஆசிரியர்கள், பேச்சாளர்கள், வானொலி நிலையங்களிற் பணியாற்றுவோர், வழக்குறைஞர் ஆகியோர் விரைந்து திருத்தமுறப் பேசவும், எதனையும் எளிதிற் புரிந்து கொள்ளவும் வேண்டும். அவ்வாறில்லையேல் அவர்கள் தங்கள் தொழில் துறைகளில் உயர முடியாது.

பொது மக்களுக்குத் தலைமை தாங்கி அவர்களை வழி நடத்திச் செல்லும் அரசியல் தலைவர்கள், கட்சித் தலைவர்கள் முதலானோர் எத்தனையும் தெளிவாக விரைந்து படித்துணரும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல், அவர்களின் எதிரிகள் அவர்களை இலகுவாக வீழ்த்தி விடுவார்கள்.

அரசாங்க அலுவலகங்களுக்கு நாள்தோறும் ஆயிரக் கணக்கான கடிதங்களும் விண்ணப்பங்களும் அனுப்பப்படுகின்றன. அங்குள்ளவர்கள் அவற்றை விரைவாக வாசித்துணரும் திறன் பெற்றிராவிட்டால் கடிதங்களுக்கும் விண்ணப்பங்களுக்கும்

பதில் அனுப்பத் தாமதம் ஏற்படும். அதனால் பொது மக்கள் அரசாங்க நிருவாகத்தைக் குறைகூற இட முண்டாகும்.

உலகம் மிக விரைவாக மாறுதலடைந்து கொண்டு வருகிறது. படித்தறிய வேண்டிய செய்தித் தாள்களும், கிழமை, திங்கள் வெளியீடுகளும் பெருகிக் கொண்டிருக்கின்றன. அறிவை வளர்க் கும் நூல்களும் புத்தம் புதியனவாய் வந்து கொண் டிருக்கின்றன. ஆகவே, விரைவாகவும் தெளிவாக வும் வாசித்துணரும் இயல்பைப் பெற்றிருந்தா லன்றி, நாம் வாழ்க்கையில் முன்னேற முடியாது.

இளம் பருவத்தில் ஏற்படும் பார்வைக் கோளா றும், நன்ருகக் கேளாமையும், கவனமின்மையும் மெதுவாக வாசித்தலுக்குக் காரணங்களாகக்கூடும். இதனுலேயே சிலர் சொல்லுக்குச் சொல் நின்று, எழுத்துக்கூட்டி, விட்டு விட்டுப் படிக்கிருர்கள். இவ்வாறு படிக்கும் பழக்கமுடையவர்கள் தன்னம் பிக்கையோடு சிறிது முயன்ருல், தங்களுடைய குறை பாடுகளைப் போக்கிக் கொள்ளலாம்.

நன்ருக வாசித்தல் என்பது இயற்கையில் அமைவதன்று. செயற்கையில் நாவின் பழக்கத்தால் அமைவது. இதனுலேயே, "செந்தமிழும் நாப்பழக் கம்" என ஔவையார் கூறினுர்.

தினச்செய்தி இதழ்களுக்குச் செய்தியனுப்புகிற வர்கள் நிமிடம் ஒன்றுக்கு முந்நூற்றைம்பது சொற் கள் வரை படிக்கிருர்கள். திறமையான சுருக்கெழுத் தாளர்கள் ஒரு நிமிடத்தில் இருநூறு சொற்கள் வரை குறிப்பெடுத்துக் கொள்கிருர்கள். இத் திறமை திடீரென ஏற்படுவதன்று; பழக்கத்தா லேயே அமைகின்றது.

மெதுவாக வாசிக்கும் குறைபாட்டைப் போக்கிக் கொள்வதற்கு, வாசிக்கும்போது கண்கள் ஒவ்வொரு சொல்லாகப் பார்த்துக்கொண்டு செல்லும்படி செய்யலாகாது ; வரியின் நடுப்பகுதியில் கண் பார்வை அமையுமாறு செய்து, வரியின் இரு பக்கங்களையும் சமமாகக் கவனிக்கும்படி செய்ய வேண்டும். இவ்வாறு பழக்கத்திற்குக் கொண்டு வந்தபின், ஒவ்வொரு வரியாகப் பாய்ந்து செல்லும் திறமையை வளர்த்துக் கொண்டால் எதனையும் விரைவாக வாசித்துணரலாம்.

விரைவாக வாசித்தலுக்குக் கண் பார்வையும், மன உணர்வும் நன்ருக அமைய வேண்டும். ஒவ்வொருவரும் கண் பார்வை குறையாமலும், மனந் தளராமலும் தங்களைக் காத்துக் கொண்டால் விரைவாகவும் தெளிவாகவும் ஒன்றை வாசித்தறியலாம் ; வாழ்விற் பேரும், புகழும் பெற்று உயரலாம்.

பயிற்சிகள் :

1. விடை கூறு : 1. நன்ருக வாசித்தல் என்பது ஒருவனுக்கு எவ்வாறு அமைகிறது ?

2. மெதுவாக வாசித்தலுக்குரிய காரணங்கள் யாவை ?

3. பொதுமக்கள் எப்பொழுது அரசாங்கத்தைக் குறை கூறுவர் ?

4. பேக்கன் என்பவர் யார் ? அவர் கூறியதென்ன ?

5. அரசியல் தலைவர்களுக்கு விரைவாகப் படித்துணரும் ஆற்றல் வேண்டும் என்பது எதனுல் ?

2. அரசியல் தலைவர்கள் ஒன்றை விரைவாகப் படித் துணர வேண்டும்—எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் கூறு?

3. சிறந்த, அறிவாளி, தெளிவு, தலைவர், இலகு, வீழ்த்தி, பாய்ந்து—எதிர்ச் சொற்கள் எழுது.

4. மனந் தளராமல், புத்தம் புதிய, நடுப்பகுதி, குறிப் பெடுத்து, குறைகூற, இலகுவாக, விட்டு விட்டு— ஒவ்வொன்றையும் பத்துச் சொற்களுக்குக் குறையாத ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

## 3. எருமை

மலாய்க்கார உழவர்கள் வாழும் கிராமப் புறங் களில் எருமைகளை மிகுதியாகக் காணலாம். ஆப் பிரிக்கா, இலங்கை, இந்தியா, பிலிப்பைன், செலி பிஸ் முதலிய நாடுகளில் வெவ்வேறு வகையான எருமைகள் வாழ்கின்றன. இது ஆடு, மாடு முதலிய அசைபோடும் விலங்கினத்தைச் சேர்ந்தது.

எருமைகள் பெரும்பாலும் கரிய நிறமுடையன; சில சற்றுப் பழுப்பு நிறமாயும் காணப்படும். எருமையின் உடம்பு பருத்துத் தலை நீண்டிருக்கும்; தோல் தடித்து உறுதியாயிருக்கும்; பசுவைப் போல அடர்ந்த உரோமங்கள் அதற்குக் கிடையா; குட்டை யான, வலிமையுள்ள கால்களும், தலையின் பக்க வாட்டமாக நீண்டு வளர்ந்துள்ள திண்மையான கொம்புகளும் அதற்கு உண்டு. பசுவின் வாலைப் போல எருமையின் வாலில் அடர்ந்த மயிர்க் கற் றையைக் காண இயலாது.



படம் 3. எருமைகள்.

எருமை இரு வகைப்படும். ஒன்று காட்டெருமை; மற்றொன்று வீட்டெருமை. காட்டெருமையை, மலையெருமை என்றும் சொல்வர். மலாயாக் காடுகளில் எருமைகள் மந்தை மந்தையாக வாழ்கின்றன. அவை மிகக் கொடியவை. எளிதிற் கோபங் கொள்பவை; புலியையும் அஞ்சாது எதிர்க்குந் துணிவு வாய்ந்தவை. வீடுகளில் வளர்க்கப் படுவன வீட்டெருமைகளாகும். வீட்டெருமைகள் மந்தமுள்ளவை; பிடிவாதமும், முரட்டுக் குணமும் உடையவை.

எருமையின் முக்கிய உணவு புல். வீட்டெருமைகள் கழுநீர், பிண்ணாக்கு, கஞ்சி, தவிடு ஆகியவற்றைப் பிரியமாக உண்ணும்.

எருமையால் வெப்பத்தைத் தாங்க இயலாது. அது ஈரத்தை மிக விரும்பும். குட்டை நீரில் தலையை நீர் மட்டத்திற்கு மேல் வைத்துக் கொண்டு அமிழ்ந்து கிடக்கும்; வயற் சேற்றில் படுத்துப் புரளும்; புல்லை

வயிருர, மேய்ந்து மர நிழலிற் படுத்து அசை போடும்.

மலாயாவில் வட இந்தியர்களும், மலாய்க்காரர் களும் எருமைகளைப் பிரியமாக வளர்க்கின்றனர். வட இந்தியர்கள் எருமைகளைப் பாலுக்காக வளர்க் கின்ருர்கள். மலாயாவின் நகர்ப் புறங்களில் வட இந்தியர்களிற் பலர் எருமைப் பாலை வாளிகளிற் கொண்டு வந்து விற்பதைக் காணலாம்.

மலாயா விவசாயிகள் எருமைகளை ஏர் உழவும், வண்டி இழுக்கவும் பயன்படுத்துகின்ருர்கள். மலாய்க் காரர் எருமை இறைச்சியை விரும்பி உண்பர். திருமணம் போன்ற சிறப்பு நாட்களில் மலாய்க் காரர்கள் எருமைகளைக் கொன்று அவற்றின் இறைச்சியைச் சமைத்து விருந்தினரை உண்பிப்பர்.

எருமை மிகப் பயனுள்ள விலங்கு. அதன் பால் மாந்தருக்கு உணவாகிறது; தோல் செருப்பு, பெட்டி, பை போன்ற பொருட்கள் செய்ய உதவு கின்றது; கொம்புகள் கத்தி உறையாகப் பயன்படு கின்றன; சீப்பு, பொத்தான் முதலியன செய்யவும் உதவுகின்றன. எருமைச் சாணம் பயிர்களுக்குச் சிறந்த உரமாகின்றது.

எருமையைச் "சண்டி" என்றுஞ் சொல்வர். எருமையில் ஆணைக் "கடா" எனவும், பெண்ணைக் கடாரி எனவுங் கூறுவர். எருமைக் கன்று பார் வைக்கு அழகாயிருக்கும்.

"சண்டி முரண்டினுல் காடு கொள்ளாது." "எருமை மாட்டின் மீது மழை பெய்தது போல" என்பன எருமையைக் குறிக்கும் பழமொழிகளாகும்.

### பயிற்சிகள் :

1. விடை கூறு :
   1. மலாய்க்காரர்களுக்கு எருமை எவ்வாறு பயன்படுகிறது?
   2. காட்டெருமைகள் எப்படிப் பட்டவை?
   3. சண்டி என்பது எதைக் குறிக்கிறது?
   4. வீட்டெருமைகள் விரும்பி உண்பன யாவை?
   5. மலாயாவில் வட இந்தியர்கள் எருமைகளை ஏன் வளர்க்கின்றனர்?
   6. எருமை பயனுள்ள விலங்கு என்பதை விளக்கு.

2. நிறைவு செய் :

   அ. காட்டெருமை.........யும் அஞ்சாது எதிர்க்கும்.

   ஆ. எருமை..............த் தாங்காது.

   இ. அது.................................உடையது.

   ஈ. .........முரண்டினல் .........கொள்ளாது.

   உ. எருமைகள் பிடிவாதமும்... ...........குணமும் ....................உடையவை.

3. அகன்ற, சுருண்ட, பட்டணம், கரிய, மந்தம், கடா, காடு, மூர்க்கம்—எதிர்ச் சொற்கள் கூறு.

# 4. மலாயாக் காடுகள்

காடுகள் ஒரு நாட்டின் இயற்கைச் செல்வங் களாகும். மலாயாத் தீபகற்பத்தின் நிலப்பரப்பில் ஏறக்குறைய அறுபது சதவிகிதம் அடர்ந்த காடு களாயிருக்கின்றன.



படம் 4. மலை.

மலாயாவின் மழை வளத்திற்கு மலாயாக் காடு களே காரணமாகும். இக் காடுகளில்லையேல் மழை பொழியாது; மழை பொழியாவிடில் நீர் நிலைகள் நிரம்பா; நீர்நிலைகள் நிரம்பாவிடிற் பயிர் பச்சை கள் வளரா; பயிர் பச்சைகள் வளராவிடில் நாட்டில் பஞ்சமுண்டாகும்.

மலாயாக் காடுகள் மலாயாவின் இயற்கை அழகை அதிகப்படுத்துகின்றன; நாட்டின் தட்ப வெப்ப நிலையைச் சமமாக்குகின்றன. மழைநீர், நிலத்தை அரிக்காதவாறு தடை செய்கின்றன;

வேகமாக வீசும் காற்றைத் தடுத்து, அருகிலுள்ள பயிர் நிலங்கள் சேதமடையாமற் காக்கின்றன.

இன்றைய நாகரிக வாழ்வில் மர வகைகள் முக்கிய இடம் பெறுகின்றன. காடுகளில் மரங்களை வெட்டுதலும், அவற்றை இங்கிலாந்து, ஆஸ்திரேலியா முதலிய பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தலும் மலாயாவின் நாலாவது பெருந் தொழிலாய் விளங்குகின்றது.



படம் 5. காடு.

மலாயாக் காடுகளில் இயற்கையிலேயே உறுதி வாய்ந்ததும், கட்டட வேலைகளுக்குரியதுமான செங்காய், மெர்போ முதலிய மர வகைகள் வளருகின்றன. மேசை, நாற்காலி, அலமாரி செய்வதற்கேற்ற மிருதுவான மெராந்தி, காப்பர், செராயா முதலிய மர வகைகளும் உள்ளன.

மலாய்க் காடுகளில் மூங்கிலும், பிரம்பும் மிகுதியாக வளருகின்றன. மலாயாவிலுள்ள எல்லா ஊர்களிலும் பிரம்பாற் செய்யப்பட்ட மேசை, நாற்காலி, கட்டில் முதலியவற்றைக் காணலாம். மலாயாவின்

சதுப்பு நிலக் காடுகளில் ஏராளமான அத்தாப்பு மரங்களும், காண்டா மரங்களும் பயிராகின்றன. அத்தாப்பு வீடு வேயவும், காண்டா மரங்கள் அடுப் பெரிக்கவும் உபயோகமாகின்றன. யானை, புலி, கரடி, மான், மரை, வான்கோழி, மயில் முதலிய உயிரினங்களும் மலாயாக் காடுகளில் வாழ்கின்றன. இவையும் காட்டுச் செல்வங்களாகவே கருதப்படு கின்றன.

மலாயாவிலுள்ள காட்டு மரங்கள் இரு வகைப் படும். ஒன்று குன்றுகளின் மீது வளர்வன; இன்னொன்று செங்குத்தான மலைகளின் மீது வளர்வன. செங்குத்தான மலைகளின்மீது வளரும் மரங்கள் சிறுத்துக் காணப்படுகின்றன; இவற்றை வெட்டுவதும் அரிது; ஆகவே இவை பயனற்றவை. குன்றுகளின்மீது வளரும் மரங்களே பயனுடை யவை; பெரியவை. இவையே மலாயாவிற்குச் செல்வத்தை ஈட்டித் தருகின்றன.

மலாயாக் காடுகள் அனைத்தும் அரசினருக்கு உரியவை. அவற்றைக் காட்டிலாகா கண்காணிக் கிறது. பல இடங்களில் ஒதுக்கப்பட்ட காடுகளிருக் கின்றன. காட்டிலாகாவின் உத்தரவின்றி யாரும் அங்கே புக முடியாது. கள்ளத்தனமாக யாரும் காட் டினுள் புகுந்து மரங்களை வெட்டாதபடி காட்டிலாகா ஊழியர்கள் கவனித்துக் கொள்வர். ஒவ்வோர் ஊரின் எல்லையிலும் காட்டிலாகாவினரின் காவல் நிலைய மிருக்கும்.

மர ஆலைத் தொழில் நடத்துவோர் காட்டிலாகா வின் உத்தரவு பெற்று அவர்கள் வெட்டச் சொல்லும் மரங்களை மட்டுமே வெட்டுவர். அவர்கள் நினைத்தபடி

எதனையும் வெட்டமுடியாது. வெட்டப்பட்ட மரங்களை அளந்து அவற்றிற்குரிய விலையைக் காட்டிலாகா அதிகாரிகளிடம் செலுத்திய பின்னரே மரங்களைக் கொண்டுவர முடியும். காடுகளில் மரம் வெட்டும் இடங்களுக்குப் போகவும் வரவும் தனிப் பாதைகளிருக்கின்றன.

காடுகள் முற்றிலும் அழிந்து போகாதபடி பாதுகாப்பது காட்டிலாகாவின் முக்கிய பணியாக விளங்குகின்றது. ஆகவே, ஒரு பகுதியில் மரங்கள் வெட்டப்படும்போது வேறொரு பகுதியில் அவற்றிற்கு ஈடாகப் புதிய மரங்கள் பயிராக்கப்படுகின்றன.

மலாயாக் காடுகளில் ஆயிரக்கணக்கான மர வகைகள் வளருகின்றன. காட்டிலாகாவினர் அவற்றின் பயன் கருதி அவற்றைப் பல்வேறு வகைகளாகப் பிரித்திருக்கின்றனர். சிலாங்கூரில், கெப்போங் என்னுமிடத்தில் ஒரு தாவர ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. அங்கு மலாயாக் காடுகளில் வளரும் மரங்களின் துண்டுகள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. தாவர நூல், மரம் வளர்க்கும் முறை, அவற்றைப் பாதுகாக்கும் முறை முதலியவைப் பற்றி அங்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

பயிற்சிகள் :

1. விடை கூறு:
   1. கெப்போங் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறுவன யாவை ?
   2. காட்டிலாகாவின் பணிகள் யாவை ?
   3. மலாயாவின் மரங்கள் எங்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன ?

4. சதுப்பு நிலக் காடுகளில் வளருவன யாவை ?

2. காடுகளின் பயன் குறித்துப் பத்து வாக்கியங்கள் எழுது.

3. காடுகள் வேகமாக வீசும் காற்றைத்தடுத்து, அருகிலுள்ள பயிர் நிலங்கள் சேதமடையாமற் காக்கின்றன. —இரு தனி வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

4. காடுகள் இயற்கை அழகை அதிகப்படுத்துகின்றன; நாட்டின் தட்ப வெப்ப நிலையைச் சமப்படுத்துகின்றன. —ஒரே வாக்கியமாக எழுது.

5. நீர் நிலைகள், பயிர் பச்சைகள், மரவகைகள், முற்றிலும், காடுகளிலும், கள்ளத்தனமாக—ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

6. தட்ப வெப்பம், சதவிகிதம், சேதமடையாமல், மரவகை, கட்டட வேலை, காட்டிலாகா, ஒவ்வோர், வேறொரு, தாவர நூல்—பிரித்து எழுது.

7. ஈடாக, பணி, எல்லை, சிறுத்து, ஈட்டி, சதுப்புநிலம், அரிக்காதவாறு—பொருள் கூறு.

# 5. அறிவியலும் அதன் பயன்களும்

மனிதர்கள் தங்களைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருள்களின் இயல்புகளை அறிந்துகொள்ள அறிவியல் உதவுகின்றது. இதனை விஞ்ஞானம் எனவும் கூறுவர். விஞ்ஞானிகள் இரவு பகலாக உழைத்து அமைத்துத் தந்துள்ள கருவிகளின் துணையால் நாம் பற்பல நலன்களை அனுபவிக்கிறோம்.

இன்று அறிவியலின் ஆதிக்கமே மேலோங்கி நிற்கின்றது. அதன் துணையின்றி நாம் உலகைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியாது. நாம் பயன்படுத்தும் புதுமைப்பொருள் ஒவ்வொன்றிலும் அறிவியல் ஒளி வீசுகின்றது. நம்முடைய அன்றாட வாழ்வில் எண்ணற்ற வழிகளில் அது நமக்குத் துணை புரிகின்றது.



படம் 6. டெலிபோன்.

தொலைபேசியின் துணையால் வெளியூர் மக்களோடும், வெளிநாட்டாரோடும் தொடர்பு கொள்ள முடிவதால் வாணிகம் செழித்தோங்குகிறது. தந்தியும், கம்பியில்லாத்தந்தியும் செய்தித்தாள் வளர்ச்சிக்கு உதவுகின்றன; மக்களின் உலகியல் அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றன. நாள்தோறும் இன்னிசை முழங்கும் வானொலி, உலக அறிவை நமக்குப் புகட்டும் ஆசானாக விளங்குகிறது.



படம் 7. வானொலிப் பெட்டி.

மின் விளக்குகள் வீடுகளிலும், கடைகளிலும், தொழிலகங்களிலும், தெருக்களிலும் இரவைப் பகலாக்குவதுபோல ஒளி வீசிக்கொண்டிருக்கின்-றன. மின்சாரம் வீடுகளிலும், அலுவலகங்களிலும் உள்ள மின்சார விசிறிகளைச் சுழலச் செய்கின்றது; வெயிலால் ஏற்படும் புழுக்கத்தைப் போக்கி, வீட்டி-



படம் 8. டிராம் வண்டி.

னுட்புறம் சிலுசிலுவெனக் குளிர்ச்சியாயிருக்கும்படி செய்கின்றது; ஆலைகளிலுள்ள இயந்திரங்களையும், ஈயக் கப்பல்களையும், டிராம் வண்டிகளையும் இயங்கச் செய்கின்றது. மின்சாரம் இல்லையேல் நம் வாழ்வே இருண்டு விடும்போல் தெரிகிறது.



படம் 9. கிராம போன்.

ஒலிப்பதிவுப் பெட்டியும், இசைத் தட்டுகளும் மறைந்துபோன பாடகர்களின் குரலையும்,



படம் 10. படக் காட்சி.

பெரியார்களின் பேச்சையும் கேட்க உதவுகின்றன. குறைந்த செலவில் படக் காட்சிகள் கண்ணுக்கும், காதுக்கும் இன்பமூட்டுகின்றன.

எக்ஸ்ரே, மலேரியாத் தடுப்பு, தொற்று நோய் ஒழிப்பு, நோவை உணர்த்தாத ஊசி மருந்துகள், அறுவை வைத்தியக் கருவிகள் போன்றவை மருத்துவத்துறையில் ஏற்பட்ட அறிவியல் முன்னேற்றங்களாகும்.

அறிவியல் உலகில் வாழுகின்ற நாம் ஒவ்வொருவரும் அதன் உண்மைகளை ஓரளவு அறிந்திருத்தல் வேண்டும், என்பதற்காகவே ஆரம்பப் பள்ளிகளில் "பொது அறிவு" என்னும் பெயரால் சில விஞ்ஞானச் செய்திகளைப் போதிக்கின்றார்கள். "தரை நூல்" கற்பிக்கப்படும் பொழுதும் வானம், கதிரவன், நிலவு, சூரிய, சந்திர கிரணங்கள் முதலியவை பற்றிய உண்மைகளை விஞ்ஞான அடிப்படையில் பிள்ளைகளுக்கு உணர்த்துகிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளில் "அறிவியல்" ஒரு தனிப் பாடமாக விரிவான முறையிற் கற்பிக்கப்படுகின்றது.

விஞ்ஞானப் படிப்பு, மாணக்கர்களுக்கு அவர்களைச் சூழ்ந்துள்ள புற உலகைப்பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள உதவுகின்றது. மனிதன் இயற்கையை எவ்வாறு தன் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்கின்றான் என்பதை விஞ்ஞானம் தெளிவாக உணர்த்துகின்றது.



படம் 11. ஆகாய விமானம்.

வானத்தைப்பற்றியும், வானிலையைப் பற்றியும் அறிந்து கொள்ளுதல் மாணக்கர்களுக்குப் பெரு மகிழ்ச்சி அளிக்கும். ஆகவே, அவர்கள் விஞ்ஞானப் படிப்பைப் புறக்கணிக்காமல் ஆர்வமுடன் கற்க முன் வரவேண்டும்.

விஞ்ஞானம் எதனையும் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றச் சொல்லுவதில்லை. யார் என்ன கூறினாலும் ஏன்? எதனால்? எப்படி? என வினாவை எழுப்பிச் சிந்திக்கும்படிச் செய்கின்றது. ஆராய்ந்து பார்த்த பின்னரே ஒன்றை நம்பும்படி கூறுகிறது.

விஞ்ஞானம் என்பது தனி நாட்டாருடைய உரிமையன்று; தனி மனிதருடைய உரிமையுமன்று. உண்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வமும், விடா முயற்சியும் உள்ளவர்கள் யாரா

யினும், எந்நாட்டவராயினும் விஞ்ஞானியாகி மனித இனத்திற்குத் தொண்டு புரியலாம்.

கல்வி இன்மையால் ஏற்பட்டுள்ள அறியாமை காரணமாக நம் நாட்டு மக்களிடையே போதிய அளவு விஞ்ஞான அறிவு பரவவில்லை. இக்குறை பாட்டைப் போக்குவதில் மலாயா மாணவர்கள் மிகுந்த அக்கறை செலுத்தவேண்டும்.

அணுக்குண்டுகள் முதலியன விஞ்ஞானத்தின் விளைவால் ஏற்படும் தீமைகள் எனச் சிலர் கூறுவர். அது விஞ்ஞானத்தின் குறையன்று; விஞ்ஞானத்தைத் தவறான வழிகளிற் செலுத்தும் வல்லரசுகளின் மண்ணாசையே அத் தீமைகளுக்குரிய காரணமாகும்.

பயிற்சிகள் :

1. விடை கூறு :

1. மின்சாரத்தால் ஏற்படும் பயன்கள் யாவை ?
2. தொலை பேசியால் உண்டாகும் பயன் யாது ?
3. வானொலிப் பெட்டியின் உபயோகம் என்ன ?
4. செய்தித் தாள்களின் வளர்ச்சிக்கு உதவுவன யாவை ?
5. பாடசாலைகளில் விஞ்ஞான உண்மைகளைக் கற்பிப்பதன் நோக்கமென்ன ?
6. விஞ்ஞானப் படிப்பு மாணவருக்கு எவ்வாறு உதவுகின்றது ?
7. விஞ்ஞானம் நமக்கு உணர்த்துவது யாது ?

2. விஞ்ஞானிகள் நமக்கு அமைத்துத் தந்துள்ள வேறு பத்துக் கருவிகளைக் கூறு.

3. அணுக்குண்டு விஞ்ஞானத்தின் குறைபாடு ஆகாது— இதற்குரிய காரணம் யாது?

4. வல்லரசு, மண்ணுசை, அணுக்குண்டு, அக்கறை, வானிலை, அறிவியல், அடிப்படை, பாடகர், புழுக்கம், சிலு சிலு—ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தொடரில் அமைத்து எழுது.

## 6. கடார வெற்றி

மலாயாவின் வடக்கு எல்லையிலுள்ள கெடா, பண்டை நாளிற் "காழகம்" என அழைக்கப்பட்ட தாகப் "பட்டினப்பாலை" என்னும் சங்க கால இலக் கியம் கூறுகின்றது. இது சோழ மன்னர்களுக்குரிய துறைமுகப் பட்டினங்களுள் ஒன்றாகவும் விளங் கிற்று.

கி. பி. பதினோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சங்கிராம வர்மன் என்னும் மன்னன் காழகத்தை ஆண்டான். இவன் கடற்கரையிலிருந்த காழகத் தைக் "கடாரம்" என்னும் பெயரில் பெரிய நகராக மாற்றியமைத்தான்; தமிழ் நாட்டு வாணிகக் கலங் களும், சீன தேசத்து வாணிகக் கலங்களும் வந்து தங்கிச் செல்வதற்கு ஏற்றவாறு கடாரத் துறை முகத்தை விரிவுபடுத்தினன்.

இதே காலத்தில் முதலாம் இராசேந்திர சோழன் தமிழகத்தின் பெரும்பகுதியை ஆட்சிபுரிந்து



படம் 12.
இராசேந்திர சோழன்.

கொண்டிருந்தான். கடாரத்து மன்னனான சங்கிராம வர்மன், முதலாம் இராசேந்திரனோடு தோழமை பூண்டிருந்தான். ஆனால், வாணிகத்தின் காரணமாகக் கடாரத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே நிலவி வந்த நல்லுறவு சீர்குலைந்தது; பகைமை வளர்ந்தது.

கி. பி. 1025-ல் அரையன் இராசேந்திரன் என்னும் தளபதியின் தலைமையில் சோழ நாட்டுக் கடற்படை, கடாரத்தின் மீது படை எடுத்தது.

சங்கிராம வர்மன் சோழ நாட்டுக் கடற்படையைத் தீரத்தோடு எதிர்த்து நின்றான். ஆனால், வலிமை மிக்க சோழ நாட்டுக் கடற் படையினர் கடாரப் படைகளை முறியடித்து, நாட்டைக் கைப்பற்றிப் புலிக் கொடியைப் பறக்கவிட்டனர். சங்கிராம வர்மன் ஆட்சியிலிருந்த நிலப் பகுதிகள் யாவும் சோழர் ஆட்சிக்கு உட்பட்டன. இராசேந்திரனுடைய இவ்வெற்றியைக் "கடாரம் கொள்ளு மொரு சோழன்" என ஒட்டக் கூத்தர் சிறப்பித்துப் பாடியுள்ளார். பின்னர், சங்கிராம வர்மனின் நிலைக்கிரங்கிய இராசேந்திரன், தான் கைப்பற்றிய கடாரத்தை அவனுக்கே கொடுத்தான்.



படம் 13.
சோழநாட்டு மரக்கலங்கள்.

முதலாம் இராசேந்திரனுக்குப் பிறகு முதலாம் இராசாதிராசன், சோழ நாட்டையாண்டான். அவனுக்குப் பிறகு அவன் தம்பி வீரராசேந்திரன் அரியணை ஏறினன். இவனுடைய ஆட்சிக் காலத்தில் கடாரம் சோழ நாட்டோடு நட்புக்கொண்டிருந்தது. இக்காலத்தில் கடாரத்தின் பகையரச னெருவன் அதனைக் கைப்பற்றிக் கொண்டான்.

நாடிழந்த கடார மன்னன் சோழ நாட்டில் வந்து தஞ்சம் புகுந்தான். வீரராசேந்திரன் கடாரத்து மன்னனுக்கு ஆறுதல் கூறி, அவனுடைய நாட்டை மீட்டுத் தருவதாக வாக்குறுதி யளித்தான். வாக்குறுதிப்படி சோழ நாட்டுக் கடற்படைகள் கடாரத்தை நோக்கிச் சென்றன.

வீரராசேந்திரனின் தங்கை மைந்தனுன முதலாம் குலோத்துங்கனும் இப்படைகளோடு கடாரத்துக்குப் புறப்பட்டான். சோழ நாட்டுப் படைகள் கடாரத்தின் பகையரசனை வென்று நாட்டைக் கைப்பற்றின. வீரராசேந்திரன், கடாரத்து அரசனுக்கு அவன் நாட்டைத் தந்து ஆளச் செய்தான்.

தமிழர்களும், தமிழக மன்னர்களும் தாங்கள் வாழ்ந்த வகையையும், வரலாறுகளையும் எழுதி வைக்கத் தவறிவிட்டனர். எனினும், அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை இலக்கியங்கள் இயம்பிக் கொண்டிருக்கின்றன. இது நமக்கு ஓரளவு ஆறுதலைத் தருகின்றது.

பயிற்சிகள் :

1. விடை எழுது : 1. இராசேந்திர சோழன் ஆண்ட நிலப்பகுதி எது?

2. சங்கிராம வர்மன் எந்த நாட்டை ஆண்டான்?

3. கெடாவின் வேறு பெயர்கள் யாவை?
4. சங்கிராம வர்மனுக்கும், இராசேந்திரனுக்கும் பகைமை ஏற்படக் காரணம் என்ன?
5. முதலாம் குலோத்துங்கன் என்பவன் யாவன்?
6. கடாரப் படை எடுப்பைத் தலைமை தாங்கி நடத்தியவன் யார்?

2. பிரித்தெழுது: இராசேந்திரன், சங்க காலம், சோழ மன்னன், துறைமுகப் பட்டினம், கடற்கரை, கடார மன்னன், ஓரளவு.

3. தெரிந்து கொள்:

1. பட்டினப் பாலை என்பது சங்க கால இலக்கியங்களுள் ஒன்று. இது கரிகால் பெருவளத்தான் என்னும் சோழ மன்னனைக் குறித்து, உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர் பெருமானால் பாடப்பெற்றது. இந் நூலுக்குத் தமிழ்ப் பெரியார், மறைமலையடிகளார் அவர்கள் அழகிய முறையில் உரையெழுதிப் பதிப்பித்திருக்கிறார்கள்.

2. ஒட்டக்கூத்தர் என்பவர் சோழ மன்னர்களின் அவைக்களப் புலவர். சோழ மன்னர்களின் வீர வரலாறுகளைக் குறிக்கும் மூவர் உலா, விக்கிரம சோழன்

உலா ஆகியன இவரால் பாடப் பட்டுள்ளன. ஈட்டி எழுபது முதலிய வேறு நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். இவர் கம்பர் காலத்தவர்.

3. சோழ மன்னர்களின் வரலாற்றைக் கூறும் மற்ருெரு நூல், கலிங்கத்துப் பரணி. இதனை இயற்றியவர் சயங்கொண்டார். இந்நூலும் கடார வெற்றியை வருணிக்கின்றது.

## 7. காகம்

காகங்கள் மலாயா நாட்டுக் கிராமப் புறங்களிற் காணப்படுகின்றன. அவை அழகற்றவை; கரிய நிற முடையவை. அவை இறந்த உயிர்களையும், அழுகிய பொருள்களையும் தின்று காற்றைத் தூய்மையாக்குகின்றன. இக்காரணத்தால் காகத்தை "ஆகாயத் தோட்டி" என்கின்ருர்கள்.

காகம் திருட்டுக் குணமுடையது. வீட்டின் முன் காய வைத்திருக்கும் உணவுப் பண்டங்களை அது திருடிச் சென்று விடும். இதனலேயே, "எத்தித் திருடும் அந்தக் காக்கை" எனக் கூறினர் பாரதியார். பழங் காலக் கிரேக்க மக்கள், காகத்தின் இருதயத்தைக் கொண்டு நீண்டநாள் வாழும் "காய கல்பம்" என்னும் மருந்தைச் செய்துண்டனர்.



படம் 14. காகம்.

திசையறி கருவி கண்டு பிடிக்கப்படாத பண்டைய நாளில் கப்பலோட்டிகள் கப்பற்றுறையை விட்டுக் கிளம்புமுன் சில காகங்களைப் பிடித்துக் கூண்டில் அடைத்து வைத்திருப்பார்கள். நடுக் கடலில் கப்பல் திசை தவறிச் செல்ல நேர்ந்தால், கூட்டில் அடைத்து வைத்திருந்த காகங்களை ஒவ் வொன்றாகப் பறக்க விடுவர். அவை அருகிலுள்ள நிலப் பகுதியை நோக்கிப் பறக்கும். உடனே மாலுமிகள் காகங்கள் செல்லும் திசையை நோக்கிக் கப்பலைச் செலுத்திக் கரை சேருவர்.

நேரிற் சண்டையிட்டு வெல்ல முடியாத பகை வரை வஞ்சனையாக, உண்ணும் உணவில் நஞ்சிட்டுக் கொல்லும் பழக்கம் எல்லா நாடுகளிலும் இருந்து வந்திருக்கிறது. இரண்டாம் உலகப் போருக்குக் காரணமானவர்களுள் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியும் ஒருவர். அவருடைய பகைவர்கள் ஒருமுறை அவரைக் கொல்வதற்காக அவருடைய உணவில் நஞ்சிட்டு வைத்தனர். சந்தேகங் கொண்ட முசோலினி, உண்ணுமுன் தமக்குப் பரிமாறி யிருந்த உணவிற் சிறிது எடுத்து, ஒரு காகத்தின் முன் வைத்தார். அதைத் தின்ற காகம் சிறிது நேரத்தில் இறந்தது. முசோலினி உயிர் தப்பினர்! தமிழ் நாட்டில் வாழ்ந்த மன்னர்களும் உண்பதற்கு முன் காகத்திற்குச் சோறிட்டு உணவைப் பரிசோதித்துப் பார்த்த பின்பே உண்டு வந்துள்ளனர். இப் பழக்கத்தாலேயே இன்றும் தமிழ் நாட்டிற் சிலர் விரத நாட்களில் உண்பதற்கு முன் காகங்களுக்குச் சோறிட்டு, அவை உண்ட பின்பே உண்ணும் பழக்கத்தை மேற்கொண்டிருக்கின்றனர். இவ்வாறு காகத்திற்குச் சோறிடுவதைக் "காகபலி" என்பர்.

காகத்தைப் போன்ற அழகில்லாத பறவைகளுள் குயிலும் ஒன்று. ஆனால், இது தன் இனிய குரலால் மனிதருக்கு மகிழ்வூட்டுகின்றது. இதன் குரலின் இனிமையை விரும்பி, மாந்தரும் இதனை விரும்பிக் கொண்டாடுவர். குயிலுக்கு முட்டை இடத் தெரியும்; அடைகாக்கத் தெரியாது. இது காகத்தின் கூட்டில் முட்டைகளை இட்டு விடும். காகம் குயிலின் முட்டைகளையும் தன் முட்டைகளென்றே கருதி அடை காத்து உதவுகின்றது.



படம் 15. குயில்.

"வைகறைத் துயிலெழு" என்ற ஔவையாரின் நல்லுரையை எல்லோரும் படித்திருப்பீர்கள். ஆனால், பலர் இந்த அறிவுரையைப் பின்பற்றுவதில்லை. காலையில் ஒன்பது மணிக்குப் படுக்கையை விட்டு எழுகின்ற மக்களும் நம்மிடையே காணப்படுகின்றனர்! காகம் எந்தப் பாடசாலைக்கும் சென்றதில்லை; படித்ததுமில்லை. எனினும், அது வைகறைப் பொழுதில் துயில் நீங்கி எழுகின்றது. பின்னர், தூங்குகின்ற மனிதரைத் துயிலெழுப்ப, வான வெளியிற் பறந்து "கா கா" எனக் கரைகின்றது. இதனைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்.

"காகம் கரைந்தது, காலையும் ஆயிற்று
கண்ணே நீ எழுந்தோடி வாராய்"

எனத் தாய் ஒருத்தி, தன் மகவை அழைப்பதாகப் பாடியுள்ளார்கள். வைகறைப் பொழுதில் துயில்

நீங்கி எழும் நல்ல பழக்கத்தை மாந்தர் காகத்தினிட மிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

"பகிர்ந்து தின்றாற் பசி ஆறும்" என்பது பழ மொழி. இப் பழமொழியைக் காகங்கள் தவறாது பின்பற்றுகின்றன. ஒரு காகம் ஓர் உணவை எங் கேனும் கண்டால் தான் மட்டும் அதைத் தனித்துத் தின்ன எண்ணாது; "கா கா" எனக் கரைந்து, தன் இனத்தையும் அருகழைத்து அவற்றுடன் சேர்ந்தி ருந்து தின்னும். இந்த இன ஒற்றுமையை நாம் காகத்தினிடமிருந்து அறிந்து பின்பற்ற வேண்டும். அவ்வாறு பின்பற்றினால் நாட்டில் தீமைகள் குறை யும்; இதைக் கருதியே,

"காக்கை இடத்திலுள்ள ஒற்றுமை கண்டு நீ
வாழ்க்கை நடத்தினால் நன்மை உண்டு"

எனப் பாவேந்தர் பாரதிதாசனார் கூறியுள்ளார்.

"காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது பழமொழி.

பயிற்சிகள் :

1. விடை கூறு:
   1. வைகறைத் துயில் எழு என்பதன் பொருள் என்ன? இதனைக் கூறியவர் யார்?
   2. காகத்தினிடமிருந்து மாந்தர் கற்றுக்கொள்ள வேண்டுவன யாவை?
   3. காகத்தை 'ஆகாயத் தோட்டி' என்பது ஏன்?
   4. காகம் குயிலுக்குச் செய்யும் உதவி என்ன?

5. ‘காகபலி’ என்பது என்ன? அப் பழக்கம் எவ்வாறு ஏற்பட்டது?
6. காகம் எப்படிப்பட்ட குண முடையது?
7. பழங்கால மாலுமிகளுக்குக் காகம் எவ்வாறு பயன்பட்டது?
8. பகிர்ந்து தின்றுல் பசி ஆறும்—இப் பழமொழியின் கருத்து யாது?

2. காகத்தைக் குறிக்கும் பழமொழிகளுள் இரண்டை எழுது.
3. கரிய, ஆகாயம், பிடித்து, வெல்ல, கொஞ்சம், இட்டார், எழுதல், அருகு, அறிவு—எதிர்ச் சொற்கள் எழுது.

# 8. பொங்கல் பண்டிகை

நாள்தோறும் வேலை செய்து அலுத்துச் சோர்வடையும் மக்கள், ஆண்டிற் சில நாட்களையாவது இன்பமாகக் கழிக்க விரும்புகின்றனர். இந்த விருப்பத்தின் காரணமாகவே உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் பற்பல விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. விழாக்கள் நாட்டு மக்களை மகிழ்விக்கின்றன. ஆதலால், ஏழை எளியவர்களும், செல்வர்களும் அவற்றை விரும்பிக் கொண்டாடுகின்றனர்.

வீடுகள்தோறும் கொண்டாடப்படும் விழாக்களுள் தனிச் சிறப்பு வாய்ந்தது பொங்கல். இதனைப் “பொங்கல் பண்டிகை” எனவுங் கூறுவர். இது பண்டை நாளில் பயிர்த்தொழில் செய்து வந்த உழவர்களால் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு



படம் 16. பொங்கல் பண்டிகை.

வந்ததால், இதனை "உழவர் திருநாள்" எனச் சிறப்பித்துக் கூறினர். ஆனால், இது பிற்காலத்தில் இந்து சமயப் பண்டிகைகளுள் ஒன்றாக மாறியதால், உழவுத் தொழில் புரியாத இந்துக்களும் இதனைக் கொண்டாடி வருகின்றனர்.

பொங்கற் பண்டிகையைப் போகி, வீட்டுப் பொங்கல், மாட்டுப் பொங்கல் என மூன்று நாட்கள் வரை கொண்டாடுவர். மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று வீட்டிலுள்ள குப்பை கூளங்களையும் அழுக்குகளையும் அகற்றித் தூய்மை செய்வர். இவ்வாறு வீட்டைத் துப்புரவு செய்வதே, "போகி" எனக் கூறப்படுகின்றது.

மறுநாள் தைமாதப் பிறப்பாகும். அன்று வீட்டுப் பொங்கல் வைப்பார்கள். மழை பொழிவதற்கும், பயிர் விளைவதற்கும் காரணமாக விளங்கும் பகலவனுக்கு நன்றி செலுத்தவே வீட்டுப் பொங்கல்

வைக்கப்படுகின்றது. புது நெல்லைக் குற்றி எடுத்த புது அரிசியைக் கொண்டு சர்க்கரைப் பொங்கலும் வெண் பொங்கலும் ஆக்குவர். பொங்கற் சோற்றைத் தலை வாழை இலைகளில் இட்டு அவற்றில் வாழைக் கனி, கரும்பு, மஞ்சள், இஞ்சி ஆகியவற்றையும் வைத்துக் கதிரவனுக்குப் படைத்து வணங்குவர். பின்னர், சுற்றத்தாரோடும், நண்பரோடும் ஒருங் கமர்ந்து பொங்கற் சோற்றை உண்பர்.

அடுத்த நாள் நடைபெறுவது மாட்டுப்பொங்கல். இது உழவுக்குப் பெருந் துணை புரிந்த மாடுகளுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு நிகழ்கிறது. அன்று காலையில் மாடுகளைக் குளிப்பாட்டுவர்; நெற்றியில் குங்குமமும் இடுவர். கொம்புகளுக்குக் காவி பூசுவர். மாட்டுத் தொழுவத்தைத் தூய்மை செய்து பொங்கல் வைப்பர். பானை பொங்கும்போது மக்களின் உள்ளம் மகிழ்ச்சியாற் பொங்கும். தலை வாழை இலைகளிற் சர்க்கரைப் பொங்கலையும், வெண் பொங்கலையும், வாழைக் கனி முதலியவற்றையும் படைப்பர். "பொங்கலோ பொங்கல்! பட்டி பெருக! சீதேவி நின்றிலங்க! மூதேவி முறிந்தோட!" என முழங்கு வர். மாடுகளை அன்பாகத் தடவிக் கொடுத்துத் தங்கள் கைகளாலேயே பொங்கற் சோற்றை எடுத்து அவற்றிற்கு ஊட்டுவர். மாலையில், மாலைகள் அணி வித்து அவற்றை விரட்டி மகிழ்வர்.

பொங்கற் பண்டிகையைக் கொண்டாடும் முறை யில் இடத்துக்கு இடம் சிற்சில மாறுதல்கள் காணப் படும். ஆனால், இது உழவர் திருநாள் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். மேலை நாடுகளில் இப்பண்டிகை "அறுவடை விழா" என்னும் பெயரிற் கொண்டாடப்படுகிறது. தற்

காலத்திற் பொங்கல் விழா பற்பல கலை நிகழ்ச்சி களோடு பொது இடங்களிலும் கொண்டாடப்படு கிறது.

பயிற்சிகள் :

1. விடை கூறு: 1. பொங்கலை ஏன் உழவர் திருநாள் எனக் கூறுகின்றனர் ?
   2. வீட்டுப் பொங்கல் எதன் பொருட்டு வைக்கப்படுகின்றது ?
   3. மாட்டுப் பொங்கல் வைப்பதன் நோக்கம் என்ன ?
   4. போகி என்பது யாது ?
   5. விழாக்கள் கொண்டாடப்படுவதன் காரணம் என்ன ?
   6. பட்டி—இச் சொல் எதைக் குறிக் கிறது ?

2. பகலவன்—இப் பொருளைக் குறிக்கும் வேறு ஐந்து பெயர்ச் சொற்களை எழுது.

3. விழாக்கள் நாட்டு மக்களை மகிழ்விக்கின்றன—மகிழ் கின்றனர் என அமையும்படி இவ் வாக்கியத்தின் பொருள் கெடாமல் மாற்றி எழுது.

4. செய்த, பார்த்த என்பன எச்சங்கள் ஆகும். இவை, செய்த (மனிதர்), பார்த்த (படம்) எனப் பெயர்ச் சொற்களைக் கொண்டு முடிவன. எனவே, இவை பெயரெச்சங்கள் எனப் பெயர் பெறும். இப்பாடத்தி லிருந்து ஐந்து பெயரெச்சங்களை எடுத்து எழுது.

5. அலுத்து, பண்டிகை, சிறப்பித்து, பிற்காலத்தில், தூய்மை, ஒருங்கு, சீதேவி, ஊட்டுவர்—ஒவ்வொரு சொல்லையும் வாக்கியத்தில் அமைத்து எழுது.

# 9. புலி

மலாயாக் காடுகளில் புலிகள் ஏராளமாக வாழ்கின்றன. இந்தியா, இலங்கை முதலிய நாடுகளிலும் இவை அதிகமாகக் காணப்படுகின்றன. இவை இருள் செறிந்த குகைகளிலும், அடர்ந்த காடுகளிலும், புதர்களிலும், நீர் நிலைகள் அருகிலும் வாழும்.



படம் 17. புலி.

புலி பூனை இனத்தைச் சேர்ந்தது. சிங்கம், சிவிங்கி, சிறுத்தைப் புலி முதலியன இதன் இனத்தைச் சேர்ந்த விலங்குகளாகும்.

புலி கம்பீரமான தோற்றமும் அழகும் வாய்ந்தது. அது சுமார் நான்கடி உயரமும் ஏழு அல்லது எட்டடி நீளமும் இருக்கும். உடலில் மஞ்சள் நிறக் குறு மயிரடர்ந்து இருக்கும். அவற்றில் கரிய வரிக் கோடுகள் உண்டு. தலை பருத்து உருண்டையாக

இருக்கும். கண்கள் பெரியவை; ஒளி மிகுந்தவை. பகலில் பூனைக்கிருப்பது போலக் கண்களின் நடுவே ஒரு கோடு காணப்படும். இரவில் அக் கோடு மறைந்து விடும். ஆகவே, இரவு வேளையில் அது எதனையும் நன்ருகப் பார்க்கும். கால்கள் உருண்டு திரண்டவை; வலிவு மிக்கவை. அவற்றில் நீட்டவும், மடக்கவும் வல்ல கூரிய நகங்கள் உண்டு; உள்ளங் காலில் மெத்தை போன்ற மிருதுவான சதைப்பற்று உண்டு; வால் நீண்டு இருக்கும். ஆனல் அதில் சிங்கத்திற்கிருப்பது போன்ற மயிர்க் குச்சு இராது.

புலி ஊன் உண்ணும் விலங்கு. இது ஆடு, மாடு, மான், பன்றி, எருமை முதலிய விலங்குகளையும் சில வேளைகளில் மனிதரையுங் கொன்று தின்னும்.

புலி பெரும்பாலும் புதரடர்ந்த இருண்ட இடங் களில் பகல் முழுதும் உறங்கி, இரவில் வேட்டை யாடும். மப்பும் மந்தாரமுமாயிருக்கும் நாட்களில் பகலிலும் வேட்டையாடுவதுண்டு. வேட்டை விலங் கைப் பதுங்கிப் பதுங்கிப் பின் தொடர்ந்து சென்று கொல்லும்; நீர் நிலையருகே பதுங்கியிருந்து, நீர் குடிக்க வரும் விலங்குகளைப் பற்றிக் கொன்று தின்னும். இது சுறுசுறுப்புள்ளது. கொடுமை யுடையது; ஆண்மை வாய்ந்தது; வீரமிக்கது; யானை யையும் அஞ்சாது எதிர்க்கும் துணிவு நிரம்பியது; எப்போதாவது ஒரு மனிதனைக் கொன்று தின்று விட்டால் ஆட்கொல்லியாக மாறக் கூடியது.

புலி கிராமப் புறங்களுக்கு வெளியே பயிரிடப் பட்டுள்ள புன்செய்ப் பயிர்களை அழிக்கும். காட்டுப் பன்றிகளையும் மான்களையும் கொன்று காய்கறித் தோட்டக்காரர்களுக்கு உதவுகிறது. இதன் தோல் படுக்கையாகவும், விரிப்பாகவும் உதவுகின்றது;

இடை வார், பணப்பை முதலியன செய்யவும் பயன் படுகிறது. பல், நகம் முதலியவை பொன்னேடு பொருத்தப்பட்டுக் குழந்தைகளுக்கு அணிகலன்களா கின்றன. புலியின் இறைச்சியைச் சிலர் உண் கிருர்கள்.

புலியின் உருவம் மலாயாவின் தேசியச் சின்ன மாகக் கருதப்படுகின்றது. ஆகவே, அஞ்சல் நிலை யங்களில் விற்கப்படும் அஞ்சல் தலைகளில் புலியின் தலை பொறிக்கப்பட்டிருக்கிறது. மலாயா கூட்டாட்சி யின் அரசாங்கச் சின்னத்திலும் புலி உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

அஞ்சா வீரனைப் புலிக்கு ஒப்பிடுவர். "புலி பசித்தாலும் புல்லைத் தின்னுது" என்பது புலியின் மானத்தைக் குறிக்கும் பழமொழியாகும். "பார்த் தால் பூனை; பாய்ந்தால் புலி"; "புலிக்குப் பிறந்தது பூனையாகாது" என்பன புலியின் வீரத்தைக் குறிக்க எழுந்த பழமொழிகளாகும்.

பயிற்சிகள் :

1. விடை தருக :
   1. கிராமப் புற மக்களுக்குப் புலியால் ஏற்படும் நன்மை யாது ?
   2. புலியின் உடல் அமைப்பு எவ்வா றிருக்கிறது ?
   3. புலிக்கும் பூனைக்கும் உள்ள ஒற்று மைகள் யாவை ?
   4. புலி எப்படிப்பட்ட இடங்களில் வாழும் ?
   5. புலி தனக்கு இரையாகும் விலங்கு களை எப்படிக் கொல்லும் ?

6. எப்பொழுது புலி ஆட்கொல்லியாக மாறும்?
7. "புலி பசித்தாலும் புல்லைத் தின்னுது" இப் பழமொழி எதனைப் புலப்படுத்துகிறது?

2. புலியைக் குறிக்கும் பழமொழிகளில் ஐந்தை எழுது.
3. புன்செய், கிராமம், நீர்நிலை, இரவு, கொல்லுதல், இறைச்சி, பற்றி, ஒளி—ஒவ்வொன்றிற்கும் வேறு இரு பொருள் கூறு.
4. துணிவு, பழமொழி, புன்செய், அழிக்கும், காட்டுப் பயிர், சுறுசுறுப்பு, ஆண்மை, இருண்ட, மிருதுவான, பருத்து—எதிர்ச் சொற்கள் தருக.
5. பன்றி, மான், பசு முதலியன புல் முதலியவற்றைத் தின்று வாழும் விலங்குகளாகும். இவ்வாறு தாவர உணவு உட்கொள்ளும் பத்து விலங்குகளின் பெயர்களைக் கூறு.

## 10. நகர சபையும் பொது மக்களும்

*நகரத்தை அழகாக வைத்து அதன் சுகாதாரத்தைக் கவனிக்கும் இலாகா, "நகர மன்றம்" அல்லது "நகர சபை" எனப்படுகின்றது. இது நகர மக்களின் நலன்களைக் காக்கவே இயங்குகின்றது.*

*ஒரு குடும்பம் தனி மனிதரின் ஆளுகையின் கீழிருக்கும். ஆனால், ஒரு நகர சபை பலருடைய நிருவாகத்தின் கீழ் இயங்கும். அது நகரத்திலுள்ள எல்லாக் குடும்பங்களின் நலன்களுக்காக இயங்குவதால், அதனை ஒரு பெருங் குடும்பமென்றே கூறலாம்.*



படம் 18. தெரு பெருக்குதல்.

தனிமனிதன், தனிக் குடும்பம், தனி இனம் என்னும் வேற்றுமையை ஒழித்து, நகர மக்கள் அனைவரும் நலமுடன் வாழ நகர சபையினர் உழைக்கின்றனர்.

நகரத்தில் வாழும் ஒவ்வொரு குடும்பத்தினரும் தத்தம் நலத்திலேயே நாட்டமுடையவர்களாயிருக்கின்றார்கள்; தங்களின் அண்டை அயலாரைப் பற்றிக் கொஞ்சமுங் கவலை கொள்வதில்லை; தங்கள் வீட்டை மட்டும் துப்புரவாக வைத்துக் கொண்டு, சுற்றுப் புறத்தின் தூய்மையைக் கெடுக்கின்றார்கள்.

வீட்டுத் துப்புரவைப் போலவே நாட்டுத் துப்புரவும் மிக இன்றியமையாதது என்பதை ஒவ்வொரு

வரும் உணர வேண்டும், மனித வாழ்வு வீட்டோடு மட்டும் அமையவில்லை! அது நாட்டுத் தொடர்பும் கொண்டது. வீட்டிற் சேரும் அழுக்குகள் வீட்டிலுள்ளவர்களின் உடல் நலத்தைக் கெடுப்பதுபோல, நாட்டிற் சேரும் அழுக்குகள் நாட்டு மக்களின் உடல் நலத்தைக் கெடுக்கும்.

தூசி கிளம்பாத அழகிய சாலைகள், கழிவு நீர் தடையின்றிச் செல்வதற்கேற்ற வடிகால்கள், அழகிய பூங்காக்கள், பொது விளையாட்டு மைதானங்கள், பொதுச் சந்தைக் கட்டடங்கள் முதலியவற்றை அமைத்துத் தருவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால், அவற்றைத் தூய்மையாக வைத்துப் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு மக்களுடையதே.

ஒவ்வொரு பெரிய நகரிலும் இலட்சக் கணக்கான மக்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் நாள் தோறும் செய்யும் அசுத்தங்களை, நூற்றுக் கணக்கான நகர சபைத் தொழிலாளர்கள் முற்றிலும் சுத்தப்படுத்திவிட முடியாது. ஆகவே, ஒவ்வொருவரும் தங்கள் நகரம் அழகாக இருக்க, அதனை அசுத்தப்படுத்துவதை விட்டொழிக்க வேண்டும்.

“அழகிய சாலைகள் ஒரு நாட்டிற்கு இதயம் போன்று விளங்குகின்றன” என்று அமெரிக்க மக்கள் கூறுகின்றனர். மேலை நாடுகளிற் சாலையை அசுத்தம் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சாலைகள் நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவானவை. அவற்றை அசுத்தமாக்க யாருக்கும் உரிமை கிடையாது. இந்த உண்மையைப் பலர் நினைவிற் கொள்ளாமல் குப்பை கூளங்களை வீசுகின்றனர்; கற்களையும் ஆணிகளை

யும் எறிகின்றனர்; பழத் தோல்களைப் போடுகின்றனர். இவற்றால் சாலைகளின் அழகும், தூய்மையுங் கெடுகின்றன.

சாக்கடைகள் கழிவு நீர் ஓடுவதற்காக அமைக்கப்பட்டவை. ஆனால், பலர் அதன் பயனை எண்ணாமல் வீட்டிற் சேரும் குப்பைகளை அதிலெறிகின்றனர். சிறு பிள்ளைகளை மலசலங்கழிக்க விடுகின்றனர். இவற்றால் சாக்கடைகளிற் கழிவுநீர் தேங்குகிறது; தீ நாற்றம் பரவுகிறது; கொசுக்களும் ஈக்களும் மொய்க்கின்றன. ஆதலால், தொத்து நோய்கள் பரவி மக்கள் உடல் நலம் பாழாகின்றது.

புகை வண்டி நிலையம் போன்ற பொது இடங்களில் உள்ள மலக்கூடங்களைப் பலர் தூய்மையாக வைக்க எண்ணுவதில்லை. அங்குள்ள சுவர்களிற் கோடுகளிட்டும், சளியைச் சிந்தி எறிந்தும் அவற்றை அசுத்தப்படுத்துகின்றனர்.

நகர சுகாதாரத்தைப் பேண நகர மக்கள் முன்வரவேண்டும். ஆகவே, ஒவ்வொரு வீட்டாரும் வீட்டின் முன் குப்பைத் தொட்டி வைத்து, வீட்டிற் சேரும் குப்பைகளை அதிலேயே கொட்ட வேண்டும்; பிள்ளைகளை மலக்கூடத்தில் மலசலம் கழிக்குமாறு பழக்க வேண்டும்; மலக் கூடங்கள், சாலைகள், பொது மண்டபங்கள், கோயில்கள் முதலிய பொது இடங்களிற் கண்டபடி எச்சிலை உமிழலாகாது. 'வீடு திருந்த நாடு திருந்தும்' என்பது முதுமொழி.

**பயிற்சிகள் :**

1. விடை கூறு: 1. நகரம் அழகாயிருக்க நகர மக்கள் செய்ய வேண்டியதென்ன?
   2. சாலைகள் எவ்வாறு அசுத்தமடைகின்றன?

3. நகர சபையினர் செய்யும் பணிகள் என்னென்ன ?
4. நகர சபை என்பது யாது ?
5. சந்தைக் கட்டடங்கள் யாருக்கு உரியவை ?

2. ஆளுகை, அண்டை, தடையின்றி, தூய்மையாக, இதயம், தீ நாற்றம்—ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

3. மலசலம், சுகாதாரம், கோடுகளிட்டு, மலக்கூடம், நகர மக்கள், நகர சபை, எண்ணுவதில்லை—பிரித்து எழுது.

4. மலக்கூடங்களைப் பலர் தூய்மையாக வைக்க எண்ணுவதில்லை — எழுவாய், செயப்படுபொருள், பயனிலை கூறு.

5. இயங்குகின்றது, உழைக்கின்றனர் என்பன நிகழ் காலத்தைக் காட்டும் வினைச் சொற்களாகும். இப் பாடத்திலிருந்து, நிகழ் காலத்தைக் குறிக்கும் ஆறு வினைச் சொற்களை எடுத்தெழுது.

# 11. நோன்புப் பெருநாள்

நோன்புப் பெருநாள் இஸ்லாமிய மக்களின் சிறந்த திருநாளாகும். மலாயாவின் அரசாங்க மதம் இஸ்லாம். ஆகவே, மலாயாவில் திருக்குர்-ஆன் ஓதும் போட்டிகளோடு, நோன்புப் பெருநாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

நோன்பு என்பது உபவாசம், விரதம், உண்ணா திருத்தல் எனப் பொருள்படும். ரம்ஸான் மாதத்தில் பிறை காணப்பட்ட மறுநாள் முதல் நோன்பு ஆரம்பமாகி, அம்மாத இறுதியில் முடிவுறும்.



படம் 19. பள்ளிவாசல்.

பத்து வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலரும் நோன்பு நோற்கக் கடமைப்பட்டவர்கள் ஆவர். நோன்பு அதிகாலையில் நாலரை மணிக்குத்



படம் 20. முஸ்லீம்கள் தொழுதல்.

துவங்கி பொழுது மறைந்ததும் முடிவுறும். நோன்பு நோற்பவர் பகலில் எதனையும் உண்ணக்கூடாது;

தாகத்திற்கு நீர் அருந்தவும் கூடாது. நோய் என்னும் காரணத்தைக் கொண்டு மருந்து தின்னவும் கூடாது. சுருட்டு, பீடி, சிகரெட் புகைப்பவர்கள், அவற்றைக் கைவிடுதல் வேண்டும்.

கதிரவன் மறைந்ததும், அந்திப் பொழுதில் நோன்பை முடிப்பதற்கு அறிகுறியாகப் பள்ளி வாசலிலிருந்து முரசொலி எழும். தொடர்ந்து, "அல் லாஹு அக்பர்" என்னும் ஒலியும் கேட்கும். அவ்வேளையில் இஸ்லாமிய மக்கள் உடல் துப்புரவு செய்துகொண்டு, வீட்டிலிருந்தபடியே மேற்கு நோக் கித் தொழுவர்; சிலர் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுவர்.

தொழுகை முடிந்ததும் ஆடவரும் மகளிரும் தனித்தனியே பாயில் அமர்ந்து உணவு உண்பர்; இதனை "நோன்பு முடிப்பு" என்பர். பின்னர், பின் னிரவு மூன்று மணிக்கு எழுந்து, சிலர் திண்பண்டங் களைத் தின்பர்; சிலர் சோறு உண்பர்.

நோன்பு நாட்களில் "அதிகாலை, பிற்பகல், மாலை, அந்தி, இரவு" என்னும் ஐந்து வேளைகளிலும் தவறுமல் அல்லாவைத் தொழுவார்கள்.

ரம்ஸான் மாதத்தின் கடைசி நாளன்று நோன் புப் பெருநாள் கொண்டாடப்படுகிறது. அன்று, ஆண்டான்—அடிமை, ஏழை—செல்வன், அரசன்—துறவி என்னும் வேறுபாடின்றி, இஸ்லாமிய ஆடவர் அனைவரும் பள்ளிவாசலில் திரளாகக்கூடி, ஆண்ட வனைத் தொழுவர்.

நோன்புப் பெருநாளன்று சிறுவர் சிறுமியர் பெரியவர்களை வணங்கி ஆசி பெறுவர். பெரியவர் கள் சிறுவர் சிறுமியரை வாழ்த்தி வெகுமதி அளிப்பர்.

" ஏழையின் பசியைப் பிறர் அறிந்துகொள்ள ஆண்டுக்கு ஒரு மாதம் நோன்பு நோற்க வேண்டு மென்பது இறைவன் கட்டளை; இம்மாதத்தில் நரகத் தின் வாசல்கள் மூடப்படும் என இஸ்லாமிய மக்கள் நம்புகின்றனர். ஆகவே, ஒவ்வொரு இஸ்லாமிய ரும் தத்தம் தகுதிக்கு ஏற்றவாறு, ஏழை எளியவருக் குத் தானதருமஞ் செய்வர்.

பயிற்சிகள் :

1. விடை கூறு :
   1. இஸ்லாமிய மக்களின் நம்பிக்கை என்ன ?
   2. நோன்பு என்பதன் பொருள் யாது ?
   3. நாள்தோறும் நோன்பு எப்பொழுது ஆரம்பிக்கும் ? எப்பொழுது முடிவு பெறும் ?
   4. நோன்புப் பெருநாள் என்றைக்குக் கொண்டாடப்படும் ?
   5. நோன்பு நோற்கத் தகுந்தவர்கள் யாவர் ?

2. பொருள் கூறு : திருக்குர்-ஆன், மதம், உபவாசம், இறுதி, அந்தி, துப்புரவு, அல்லா, ஆண்டான், பள்ளிவாசல், கட்டளை.

3. எதிர்ச் சொற்கள் கூறு :

| | |
|---|---|
| மறைந்தது × ...... | பின்னிரவு × ...... |
| துப்புரவு × ...... | செல்வன் × ...... |
| அடிமை × ...... | நரகம் × ...... |
| கைவிடுதல் × ...... | துறவி × ...... |
| பிற்பகல் × ...... | ஆடவர் × ...... |

# 12. வானவில்

வான வெளியிற் காணப்படும் அழகிய இயற்கைக் காட்சிகளுள் வானவில் மிகச் சிறந்தது. வானவில்லின் வடிவ அமைப்பிலும், அதன் வண்ண அழகிலும் ஈடுபட்ட கவிஞர்கள் அதனைப் பலபடப் பாராட்டியிருக்கின்றனர்.

மழைக் காலத்தின்போது அடிவானத்தில் அரை வட்ட வடிவமாய்ப் பல நிறங்களோடு காணப்படும் வில் போன்ற வளைவையே நாம் "வானவில்" என்கிறோம்.

வானவில் பகலில் மட்டுமே காணப்படுகின்றது. பகலிலும் காலையில் எட்டு மணிக்கு முன்பும், மாலையில் நான்கு மணிக்குப் பின்பும் தென்படும். இவ் வேளைகளில் கதிரவன் கதிர்கள் சாய்வாக விழுகின்றன. ஆகவே, கதிரவனின் சாய்வான கதிர்கள் வானவில் தோன்றுவதற்கு ஒரு காரணமாய் அமைகின்றது.

மழைக் காலத்தில் மழை மேகங்கள் வானவெளியில் நிறைந்திருக்கும் போதும் மழை பெய்து கொண்டிருக்கும் போதும், கதிரவன் ஒளி வீசிக் கொண்டிருக்கும் போதும், வானவில் தோன்றுகிறது. பிற நேரங்களில் அது தோன்றுவதில்லை. எனவே, வானவில் அமைவதற்கு மழைத் துளிகளும் ஒரு காரணமாகின்றன என்பதை அறியலாம்.

கதிரவன் கிழக்குப் பக்கத்தில் இருந்தால் வானவில் மேற்குப் பக்கத்தின் அடி வானத்தில் தோன்றும். அது மேற்குப் பக்கத்திற் காணப்பட்டால், வானவில் கீழ்த் திசையின் அடிவானத்தில் காணப்படும். இதிலிருந்து கதிரவனுக்கு எதிர்ப்



படம் 21. வான வில்

புறத்தில் தான் வானவில் தோன்றும் என்பதை உணர்கிறோம்.

வானவில்லைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முதலில் கதிரவனைப் பற்றியும் அதன் கதிர்களின் தன்மைகளைப் பற்றியும் அறிந்து கொள்ளல் வேண்டும். கதிரவனிடமிருந்து வெளிப்படும் கதிர்கள், பார்வைக்கு வெண்ணிறமாய்க் காட்சியளிக்கின்றன. ஆனல், அவை உண்மையில் வெண்ணிற முடையன வல்ல.

கதிரவன் ஒளியில் சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா ஆகிய ஏழு நிறங் களிருக்கின்றன. ஆனல், கதிரவன் தன்னைச் சுற்றிக் கொள்வதால் இந்த ஏழு நிறங்களும் ஒன்று சேர்ந்து ஒரே வெண்ணிறமாகக் காட்சியளிக்கின்றன.

கதிரவன் ஒளியில் ஏழு நிறங்கள் உண்டென் பதை இந்திய மக்கள் நன்கறிந்திருந்தனர். அவர்கள் கதிரவனை ஒரு தேவனுக்கி, அதன் கதிர்களிலுள்ள ஏழு நிறங்களையும் ஏழு குதிரைகளாக்கினர். பின்னர் வானவெளியில் ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் கதிரவன் வலம் வருவதுபோல ஓர் ஓவியமும் அமைத் தனர். இவ்வோவியம் இன்றும் சில இடங்களிற் காணப்படுகிறது.

கதிரவன் ஒளியில் ஏழு நிறங்கள் உள்ளன வென்பது பரிசோதனையின் மூலம் நன்கறியப்பட்ட தாகும். இதைத் தெரிந்துகொள்ள, ஓர் அட்டையை வட்டமாக வெட்டிக்கொள். அதன் நடுவே ஒரு சிறு துவாரமிடு. பின்னர், அவ்வட்டத்தை ஒரே அள வுடைய ஏழு சம பாகங்களாகப் பிரி. சிவப்பு முதல் ஊதா வரையுள்ள ஏழு நிறங்களைக் கட்டத்திற்கு ஒன்ருகப் பூசு. பிறகு அட்டையின் நடுவேயுள்ள

துவாரத்தோடு ஒரு சிறு குச்சியையோ கம்பியையோ பொருத்தி விசையாகச் சுழற்று. அப்பொழுது அந்த ஏழு நிறங்களும் தத்தம் தனித் தன்மையை இழந்து, மங்கலான வெண்ணிறமாய்க் காட்சியளிப் பதைக் காண்பாய்.

இப்பரிசோதனையை வேறு விதமாகவும் செய்து பார்க்கலாம். துணியைத் துப்புரவு செய்ய அதை நீரில் நனைத்துச் சவர்க்காரத்தைத் தேய்ப்பர். அப் பொழுது துணியின் மீது நுரையும் குமிழிகளும் எழும். அக்குமிழிகளின் வழியாகக் கதிரவனை நோக்கினல் சிவப்பு முதலிய ஏழு நிறங்களையும் காண லாம். இதனை, "நிறமாலை" என்பர்.

மழைக் காலத்தில் வானவெளி நுண்ணிய நீர ணுக்களால் நிறைந்திருக்கும். இந்த நீரணுக்கள் மழை உருவம் பெற்று நிலத்தை அடையும்போது கதிரவனின் சாய்ந்த கிரணங்கள் அவற்றை ஊடுருவிச் செல்கின்றன. இவ்வாறு ஊடுருவும் கதிர் களின் நிறங்களை நீரணுக்கள் சிதறச் செய்கின்றன. சிதறிய ஒளிக் கதிர்கள் ஒன்று சேர்ந்து வானவில் லாகக் காட்சியளிக்கின்றன.

வானவில்லிலுள்ள நிறங்கள் சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா என்னும் வரிசைக் கிரம முறையிலிருக்கும். சிவப்பு உச்சி யிலும் ஊதா அடியிலும் காணப்படும். சில சமயங் களில் ஊதா மேலும், சிவப்பு அடியிலுமாகத் தோன்றுவதுமுண்டு.

சில சமயங்களில் நல்ல நிலவொளி வீசும் இராக் காலங்களில் வானவில் தென்படும். நிலாக் கதிர்கள் மழை மேகத்தில் படுவதன் மூலம் இரவு வானவில் அமைகிறது. ஆனல், பகலிற் காணப்படும்

வானவில்லைப் போல ஒளி மிகுந்ததாயிராமல் மிக மங்கலாகக் காணப்படும். இதனைப் பழங் காலத் தமிழ் மக்கள் பின்னல் விளையப் போகும் தீமைக்கு அறிகுறியாகக் கொண்டனர் என்பதைச் சிலப்பதி காரத்தால் அறிய முடிகிறது. இந்திர தராசு, இந்திர வில் என்பன இதன் வேறு பெயர்களாகும்.

பயிற்சிகள் :

1. விடை கூறு:
   1. வானவில் தோன்றுவதற்குக் காரணமானவை எவை?
   2. கதிரவன் கீழ்த்திசையில் இருந்தால் வானவில் எப்பக்கம் தோன்றும்?
   3. கதிரவன் ஒளி வெண்மையாகக் காணப்படுவது ஏன்?
   4. நிறமாலை என்பது யாது?
   5. வானவில் என்பது என்ன?
   6. இந்தியர்கள் கதிரவனின் நிறங்களை அறிந்திருந்தனர் என்பதற்குரிய ஆதாரம் யாது?
   7. வானவில்லில் காணப்படும் நிறங்கள் எத்தனை? அவை என்னென்ன?
2. கதிரவன், நிலவு இவற்றைக் குறிக்கும் வேறு நான்கு பெயர்ச் சொற்களை எழுது.
3. வானம்—இதைக் குறிக்கும் வேறு மூன்று பெயர்ச் சொற்களை எழுது.
4. வானவெளி, வானவில், வட்ட வடிவம், வெண்ணிறம், நீரணுக்கள், ஊடுருவி—பிரித்து எழுது.
5. இயற்கை, சிறந்தது, வளைவு, தென்படும், காரணம், அடி, வெண்ணிறம், வலம், மங்கலான, நுண்ணிய—எதிர்மறைச் சொற்கள் தருக.

# 13. மூக்குக் கண்ணுடி அணிதல்

பழங்கால மக்களுக்கு உற்று நோக்கிச் செய்யும் வேலைகள் மிகக் குறைவு. பெரும்பாலோர் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்ததால் பசுமையான காட்சிகளைக் காணும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. ஆகவே, அவர்களின் கண் பார்வை இளமையிற் கெடவில்லை. முதுமைப்பருவம் எய்தியவர்கள் மட்டுமே கண் பார்வை குன்றி வருந்தினர். அவ்வாறு பார்வைக் குறைவு நேர்ந்தபோது புலவர்களும், அறிஞர்களும் தங்களுடைய மாணவர்களைக் கொண்டு எழுதுவித்தும், பேசுவித்தும் வந்தனர்.



படம் 22.

பண்டை நாட்களிற் கண்பார்வை குறைந்தாற் குறைந்ததுதான். அந்தக் குறைபாட்டைப் போக்கிக் கொள்ளவும் இயலாது. இதனுலேயே கிரேக்க நாட்டுப் புலவரான ஹோமர், ஆங்கில நாட்டுப் புலவரான மில்டன், தமிழ் நாட்டுப் புலவரான வன்தொண்டச் செட்டியார் போன்ருர் குருடர்களாகவே தம் வாழ்நாட்களைக் கழிக்க நேர்ந்தது.

இந்நாளில் பள்ளி மாணவர்கள் முதல் அரசாங்க அலுவல்களில் ஈடுபட்டிருப்போர் வரை, உற்று நோக்கிச் செய்யும் வேலைகளில் அதிகம் ஈடுபடுகிருர்கள். இவர்கள் கண்களைக் கூசச் செய்யும் மின் விளக்கின் கீழ் அமர்ந்து மணிக்கணக்காகப் படிக்க வேண்டியதிருக்கிறது; எழுதவேண்டியதிருக்

கிறது. ஆகவே, இக்கால மக்களிற் பலருக்கு இளமையிலேயே கண்பார்வை குறைந்துவிடுகிறது.

கண்களை மிகுதியாகப் பயன்படுத்தும் ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், பொற்கொல்லர்கள், கைக்கடிகாரம் பழுதுபார்ப்பவர்கள், விஞ்ஞானிகள் போன்ருருக்குக் கண் பார்வை விரைவில் குன்றிவிடக்கூடும். அவ்வாறு பார்வை குன்றியவர்கள், தகுந்த கண் வைத்தியரை அணுகிக் கண்களைப் பரிசோதித்துப் பொருத்தமான மூக்குக்கண்ணுடியை அணிந்துகொண்டால், இழந்த பார்வையை மீண்டும் பெறக்கூடும். ஆனல், பிறவிக் குருடர்களோ, கண்ணொளி அறவே மங்கியவர்களோ கண்ணுடி அணிவதன் மூலம் பார்வையைப் பெறமுடியாது.

கண்ணுடிகள் கண்களில் தூசி, புழுதி முதலியன படாமற் காக்கின்றன; தலைவலியைப் போக்குகின்றன; கண்களில் நீர் வடிதலைத் தடுக்கின்றன; வெயிலின் கொடுமை தெரியாதவாறு செய்கின்றன; குருட்டுக் கண்களை மறைத்து முகத்திற்கு அழகு செய்கின்றன.

கண்களுக்குப் பாதுகாப்பாயிருக்கும் இக்கண்ணுடிகள், மூக்கின் மீது பொருந்தி நிற்றலால் இவை மூக்குக் கண்ணுடிகள் என அழைக்கப்படுகின்றன. பதின்மூன்ரும் நூற்ருண்டில் பிளாரன்டைன் என்னும் நகரில் வாழ்ந்த "ரோஜர் பேக்கன்" என்னும் இத்தாலிய விஞ்ஞானி மூக்குக் கண்ணுடியைச் செய்தார். இது பற்பல மாறுதல்களைப் பெற்றுப் பதினெட்டாம் நூற்ருண்டில் ஐரோப்பிய பாதிரிமார் மூலம் கீழை நாடுகளிற் பரவிற்று.

மூக்குக் கண்ணுடிகள் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், புலவர்கள், அறிவாளிகள், ஆசிரியர்

கள் ஆகியோர்களின் கண்களைக் காத்து உலகிற்குப் பேருபகாரம் புரிந்திருக்கின்றன. இவையில்லையாயின் மனிதரிற் பலர் காற் குருடர், அரைக் குருடர், முக்காற் குருடர், முழுக் குருடர் என வாழவேண்டிய நிலையிலிருப்பர்.

பயிற்சிகள் :

1. விடை கூறு :

1. மூக்குக் கண்ணாடியை முதன் முதலில் செய்தவர் யார் ?
2. யார் யாருக்குக் கண் பார்வை விரைவிற் கெடும் ?
3. மூக்குக் கண்ணாடியாற் பயன் பெற முடியாதவர்கள் யாவர் ?
4. இக்கால மக்களின் கண்பார்வை ஏன் இளமையிலேயே குன்றி விடுகின்றது ?
5. கண்ணுக்குரிய கண்ணாடி, மூக்குக் கண்ணாடி என அழைக்கப்படுவதேன் ?
6. மூக்குக் கண்ணாடியின் பயன்கள் யாவை ?

2. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தொடரில் அமைத்து எழுது :

குன்றி, அறிவாளிகள், மறைத்து, கொடுமை, தலைவலி, ஈடுபட்டு, பருவம், வினவில்

3. எதிர்ச்சொற்கள் எழுது :

அமர்ந்து, ஞானி, கொடுமை, அணுகி, இழந்த, இக்காலம், முதல், அறிஞன்.

# 14. வதந்தி

வதந்தி என்பது, உலகப் பேச்சு எனப்பொருள் படும். இதனை அலர்தூற்றுதல், கவ்வை எனவும் கூறுவர். ஒருவரைக் குறித்துப் பற்பலர் பற்பல விதமாகப் பேசுவதையே "வதந்தி" என்கிறோம். வதந்திகள் அவற்றைப் பரப்பும் மக்களின் குணப் போக்குகளுக்குத் தகுந்தபடி அமையும்.

பண்டைய நாளில் அரசர்கள் தங்களுடைய ஒற்றர்களைப் பகைவர்களின் நாடுகளுக்கு அனுப்பி, அவர்களுக்கு எதிரான வதந்திகளை மக்களிடையே பரப்பி விடுவர். அதனால் கலகங்கள் தோன்றும் போது, அவற்றைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு அந்நாடுகளின் மீது படையெடுப்பர். இந்நாளிலும் அரசியல்வாதிகள் தங்களின் எதிர்க்கட்சியினர்மீது பல வதந்திகளைப்பரப்பி மக்கள் மனத்தை மாற்ற முயலுவதும் உண்டு.

காரணமில்லாமலே பிறரைக் குறைத்துப் பேசுவதில் சிலருக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. சிலர் பிறரிடம் கைக்கூலி பெற்றுக்கொண்டு ஒருவரை வாய்க்கு வந்தபடி குறை கூறுவதுண்டு. ஆகவே, பொறாமைக் குணமுடைய சிலரும், கைக்கூலி பெறுவோர் சிலரும், கட்சி மனப்பான்மை கொண்ட பலரும் தனித்தனியே கும்பல்கூடி ஊர் வம்புகளைப் பற்றிப் பேசத் துவங்கும்போதுதான் வதந்திகள் தோன்றுகின்றன. வதந்திகள் பெரும்பாலும் புனைந்துரைக்கப்பட்டனவாகவே இருக்கும்; அவற்றில் உண்மையிராது.

139675

தனித்த இடத்தில் ஒருவர் தமக்கு வேண்டியவரிடம், "இது மிக இரகசியமானது ; வேறு யாருக்கும் தெரியலாகாது ; வேறு எவருக்கும் கூறலாகாது", என ஒன்றைச் சொல்லுவார். அதைக் கேட்டவர், தாம் கேட்டவற்றில் தமக்குப் பிடித்தமில்லாதவற்றை நீக்கிவிட்டுப் புதிதாகச் சில செய்திகளைச் சேர்த்து வேறொருவரிடம் கூறுவார். இவ்வாறே, இரகசியம் எனக் கூறப்பட்ட ஒன்று, தனித் தனியே ஒவ்வொருவராலும் பிறருக்கு அறிவிக்கப்பட்டுப் பலர் கூடும் பூங்கா, கோயில், சந்தை, கடைத்தெரு முதலிய இடங்களிற் கொஞ்சங் கொஞ்சமாகப் பரவி, நாளடைவில் நகரெங்கும் பரவிவிடுகிறது. இதுவே வதந்தியின் இயல்பாக அமைகிறது.



படம் 23.

வதந்தி படித்தவனாலும் பரவுகின்றது ; படிக்காதவனாலும் பரவுகின்றது. பத்திரிகைகளாலும் பரவுகின்றது. புதிதாக ஒரு செய்தியைப் பிறருக்குக் கூறவேண்டும் என்னும் ஆவலாற் சிலர் வதந்திகளைப் பரப்புகின்றனர். பிறருக்குத் தெரியாதவை சில தங்களுக்குத் தெரியும் என்பதைக் காட்டிக்கொள்ளச் சிலர் புளுகுவதுண்டு.

"மிக நெருங்கிய இடத்திலிருந்து கிடைத்த செய்தி" எனவும், "விஷயமறிந்த வட்டாரங்களிற் பேசிக்கொள்ளப்படுகிறது" எனவும் ஒரு பிடிப்புமில்லாமல் சில செய்திகள் செய்தித் தாள்களில் வெளிவருகின்றன. இவை பத்திரிகை வதந்திகளாகும். இச்செய்திகளை உண்மை எனக் கொள்ளலாகாது.

வதந்திகளால் விளைந்த தீங்குகள் பலவற்றை வரலாறு நமக்குக் காட்டுகிறது. கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானியான சாக்ரட்டீசு இறப்பதற்குக் காரணமாயிருந்தவை வதந்திகளே. அவருடைய எதிரிகள் "சாக்ரட்டீசு இளைஞர்களின் மனத்தைக் கெடுத்து வருகிறார்" என்னும் வதந்தியை நகரெங்கும் பரப்பினர். அவ்வதந்தியே அவர்மீது வழக்குத் தொடரக் காரணமாயிருந்தது. ஒவ்வொருவரும் தாங்கள் கேள்விப்பட்டவற்றையே கூறினர். சாக்ரட்டீசுக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்குத் தகுந்த சான்றுகள் காட்டப்படவில்லை. எனினும் வதந்தியை ஆதாரமாக வைத்து, அவரை நஞ்சுண்டு மாளச் செய்தனர்.

வதந்தியை நம்பிக் கெட்ட குடும்பங்கள் பல உள; சீரழிந்த அரசுகளும் பலவுள. வதந்தியால் பல கொடுமைகளுக்கு ஆளான அறிஞர்களும் உள்ளனர்.

தீயவர்கள் தங்களின் தீய எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ள இதனை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள். வதந்தியைக் கொண்டு ஒருவருடைய உண்மை நிலையைப் புரிந்துகொள்ள முடியாது. ஆகவே, ஒருவரைப்பற்றிய வதந்தியை யாரும் உண்மையென நம்பலாகாது.

பயிற்சிகள்:

1. விடை கூறு:
   1. சாக்ரட்டீசு என்பவர் யார்?
   2. அவருடைய இறப்புக்குக் காரணமாயிருந்தது எது?
   3. பத்திரிகையில் வெளியாகும் வதந்தி எப்படிப்பட்டது?

4. வதந்தி எவ்வாறு பரவுகிறது?
5. வதந்திகளைப் பரப்புகின்றவர்கள் யாவர்?
6. வதந்தி என்பது யாது? அதற்குரிய வேறு பெயர்கள் யாவை?

2. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது:

ஒற்றர், கலகம், கட்சி, அவதூறு, கைக்கூலி, ஊர்வம்பு, புனைந்து, மாள, புரிந்து, சீரழிந்த.

3. பிரித்து எழுது:

மனப்பான்மை, சீரழிந்த, குணப்போக்கு, மன மாற்றம், நகரெங்கும்.

# 15. மலாயாவின் பாங்குகள்

"திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" என்பது அவ்வையின் அறிவுரை. திரவியம் என்பது பணம், பொன், நகை முதலிய பொருள்களைக் குறிக்கும். வாழ்க்கைக்குத் தேவையான செல்வப் பொருளைத் தேடுதல் மிக அரிது. தேடிய பொருளைப் பாது காப்பது அதை விட அரிது.

பண்டைய மக்களிற் சிலர் தாம் தேடியபொருள் களைக் கள்வரிடமிருந்து காக்க, அவற்றைத் தங்க நாணயங்களாகவோ, தங்க நகைகளாகவோ மாற்றிச் சிறு செப்புக் குடங்களில் வைத்து மூடிப் பிறரறி யாதவாறு கொல்லை நிலத்திலோ, ஊருக்குப் புறம் பான இடத்திலோ புதைத்து வைத்தனர். அவ்வாறு புதைத்தவர்கள் தமக்குரியவர்களிடம் அச் செல்வம் இருக்குமிடத்தைக் கூறாமலே இறந்து விடுதலும்

உண்டு. பின்னர், வேறு யாரேனும் ஒருவர் வீடுகட்டவோ, வேறு காரணங்களுக்காகவோ செல்வம் புதைக்கப்பட்ட இடத்தைத் தோண்டும்போது நிலத்தின் கீழிருக்கும் தங்க நகைகள் அடங்கிய குடம் அவர் கையிற் சிக்கி, அவர் திடீர்ச் செல்வராவதுண்டு. நிலத்தின் கீழ்ப் புதைக்கப்பட்ட செல்வமே "புதையல்" என்னும் பெயர் பெற்றது.

நிலத்தினடியிற் புதையுண்ட செல்வம், அதனைப் புதைத்தவருக்குப் பயன்படுவதில்லை; அவருடைய குடும்பத்தினருக்கும் பயனாவதில்லை; வேறொருவனுக்கே பயன்படுகிறது. இவ்வாறு, தாம் அரும்பாடு பட்டுத் தேடிய செல்வத்தைத் தமக்கும் பிறர்க்கும் பயன்படாதவாறு வீணாக மண்ணில் புதைத்து வைத்து இழக்கும் மாந்தரையே "கேடு கெட்ட மானிடர்" என அவ்வையார் பழித்துரைக்கின்றார்.



படம் 24. மத்தியபாங்கு கட்டிடம்.

இந்நாளிற் செல்வத்தைப் பாதுகாக்க மண்ணிற் புதைத்து வைக்க வேண்டா; பிறரை நம்பிக்

கொடுத்து ஏமாற வேண்டா; மக்களுடைய பணம், நகைகள், பத்திரங்கள், சாசனங்கள் முதலிய வற்றைப் பாதுகாத்துத் தரப் பாங்குகள் முன் வருகின்றன.

மக்கள் சேமித்து வைக்கும் பணத்தை நம்பிக் கையுடன் பாதுகாத்து, வேண்டியபோது தரும் நிறுவனங்களையே "பாங்குகள்" என்கிறோம். இவை பொருள் வளமுடைய செல்வர்களின் மூல தனங்களைக் கொண்டு இயங்குகின்றன.

மலாயாவிலுள்ள ஒவ்வோர் அஞ்சல் நிலையத் திலும் அரசினரின் சேமிப்புப் பாங்கு உண்டு. இது பொது மக்கள் தங்களின் சிறு சேமிப்புக்களைச் செலுத்தி, வேண்டும்போது திரும்பப் பெற்றுக் கொள்ள உதவுகின்றது. இங்குச் சேமித்து வைக் கப்படும் பணத்திற்கு வட்டி தரப்படுகின்றது.



படம் 25. பாங்கின் உட்புற அலுவல்கள்.

"டிரஷரி" அல்லது "கஜானா" என்பது ஒவ்வொரு ஜில்லாவிலும் உண்டு. இதனை அரசாங்கத்தின்

பொறுப்பிலுள்ள சிறு பாங்கி என்றே கூற வேண்டியதிருக்கிறது. அரசாங்கக் குத்தகைதாரர்கள் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய பணத்தை "டிரஷரி" மூலமாகவே செலுத்துகிறார்கள். தாங்கள் அரசாங்கத்தினிடமிருந்து பெற வேண்டிய பணத்தையும் டிரஷரி மூலமாகவே பெறுகின்றார்கள். டிரஷரியைத் தமிழில், "கருவூலம்" என்பர்.

சுதந்திரமாய் விளங்கும் ஒவ்வொரு நாடும் தமக்கென ஒரு மத்திய பாங்கியை நிறுவிக் கொள்கின்றது. இம்முறையில் சுதந்திர மலாயா அரசாங்கமும் தனக்கென ஒரு மத்திய பாங்கியை நிறுவிக் கொண்டது. இது "நெகாராதாஞ மலாயு" என அழைக்கப்படுகிறது. இப்பாங்கு முன்னாள் நிதி அமைச்சர் கர்னல் எச். எஸ். லீ. அவர்களின் முயற்சியால், பத்துக் கோடி வெள்ளி மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனைக் காலஞ் சென்ற முதலாம் பேரரசர், மாட்சிமை தங்கிய துவாங்கு அப்துல் ரஹ்மான் அவர்கள் 1958-ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 24-ம் நாளில் அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார்கள். "மலாயாவிற்கான சொந்த நாணயங்களை அச்சிடுதல், நிதி, சம்பந்தமாக அரசினருக்கு ஆலோசனை கூறுதல், மலாயாவின் நாணய உறுதிப்பாட்டைப் பாதுகாத்தல், நாட்டுக்குப் பயன் உண்டாகும் வகையில், பல்வேறு துறைகளில் கிடைக்கும் பணத்தை அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவுதல்" ஆகியன இப் பாங்கியின் நோக்கங்களாகும்.

"சாட்டர்டு பாங்கு, மெர்க்கண்டைல் பாங்கு, இந்தியன் பாங்கு, இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு, சைனா பாங்கு, யோகஹாமா பாங்கு" எனப் பல பாங்குகள்

மலாயாவில் தொழிற்படுகின்றன. இவை அனைத்தும் தத்தம் நாட்டு மூலதனத்தால் நடைபெறுகின்றன. பிற நாட்டுப் பொருள்கள் மலாயாவில் இறக்குமதி யாவதற்கும் நம் நாட்டுப் பொருள்கள் பிற நாட்டுக்கு ஏற்றுமதியாவதற்கும் இப் பாங்குகள் அரும்பணி புரிகின்றன. இவற்றால் மலாயாவின் தொழில் வளம் பெருகுகின்றது. இவற்றைத் தவிரப் பாங்குகளால் ஏற்படும் பயன்கள் மிகப் பலவாகும்.

வெளியூரிலுள்ள ஒருவருக்குப் பெருந் தொகை யான பணத்தை நேரிற் கொண்டு போய்க் கொடுப் பதில் பல சிரமங்கள் உண்டு. முதலாவது அதிகப் பணச் செலவு ஏற்படும். இரண்டாவது திருடரால் கவரப்படலாம். மூன்றாவது அப் பணத்தால் உயிருக்கே ஊறு உண்டாகக் கூடும். பாங்குகள் இந்தச் சிரமங்களை அறவே மாற்றிவிடுகின் றன. பாங்கியிலிருந்து தரப்படும் செக்குகளைக் கையாளுவதின் மூலம் எவ்வளவு பெரிய தொகையை யும் ஒருவர் இன்னொருவருக்கு எளிதாகக் கிடைக்கும் படி செய்யலாம். மிகத் தொலைவிலுள்ள வெளி நாட்டில் உள்ளவர்களுக்கும் பாங்கின் மூலமே பணம் அனுப்பலாம். பணம் பெறுகின்றவர் ஆயிரக்கணக் கான மைல்களுக்கு அப்பாலிருந்தாலும் பணம் மிக எளிதாகக் குறித்தவரிடம் போய்ச் சேர்ந்து விடும்.

### பயிற்சிகள் :

1. விடை கூறு : 1. பாங்குகள் என்பன யாவை? அவற்றின் பணிகள் என்னென்ன?

2. அஞ்சல் நிலையச் சேமிப்புப் பாங்கு யாரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது?

3. டிரஷரி என்பது என்ன? அதன் அலுவல்கள் யாவை?
4. புதையல் என்பது யாது?
5. அவ்வையார் யாரை 'கேடு கெட்ட மானிடர்' எனக் கூறுகிறுர்?
6. நெகாரா பாங்கின் நோக்கங்கள் யாவை?

2. ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது:

திரை, பொன், கள்வர், புதையல், பழித்து, ஏமாற, சேமித்து, பொருள் வளம், கருவூலம், பெரு முயற்சி.

3. இவற்றைப் பிரித்து எழுது:

செப்புக் குடம், மூலதனம், தமக்குரியர், பேரரசர், வெளியூர்.

4. எதிர்ச்சொல் எழுது:

எளிது, வெளிநாடு, ஊறு, திறந்து, வளம், பழித்து.

5. தெரிந்து கொள்:

(அ) பாங்கில் பணப் போட்டு வைத்திருப்பவர், தமக்குத் தேவையான பணத்தைப் பெறப் பாங்கியிலிருந்து தரப்படும் ஒருவகைத் தாளில், தமக்கு வேண்டிய தொகையையும், தேதியையும் குறித்துக் கையெழுத்திட்டுக் கொடுப்பார். இந்தத் தாளே "செக்" எனப்படுகின்றது. இந்தத் தாளைப் பெற்றுக் கொண்டு, அதில் குறித்திருக்கும் பணத்தைப் பாங்கு சம்பந்தப்பட்டவருக்குக் கொடுக்கும்.

(ஆ) டிரஷரி, பாங்கு என்பன ஆங்கிலச் சொற்கள். கஜானு என்பது உருதுச் சொல். இவ்வாறு

தமிழிற் கலந்துள்ள வடமொழியல்லாத பிற மொழிச் சொற்களை "திசைச் சொல்" என்பர்.

(இ) சுதந்திரம், சம்பந்தம், தனம், நிதி என்பன வட சொற்கள். இவை முறையே உரிமை, தொடர்பு, பணம், பொருட்குவை எனத் தமிழிற் கூறப்படும்.

## 16. எரிமலைகள்

இயற்கையில் காணப்படும் விந்தைகளுள் எரிமலைகள் மிகக் கொடியவை. அவற்றால் நேரும் அழிவுகளுக்குக் கணக்கேயில்லை. எரிமலை என்றால், மலை தீப்பற்றி எரிவது என எண்ண வேண்டா. நிலத்தின் உள்ளேயுள்ள தீக்குழம்பு நிலத்தைப் பிளந்து கொண்டு, நிலத்தின் மேலுள்ள மலைத் துவாரங்கள் வழியாக வெளிப்படுகிறது. இவ்வாறு தீக்குழம்பு வெளிவருவதற்குரிய வாயில்களாக அமைந்த மலைகளையே எரிமலைகள் என்கின்றோம்.



படம் 26. எரிமலை.

நாம் வசிக்கும் இவ்வுலகம் பன்னெடுங் காலத்திற்கு முன்பு ஒரே தீப்பிழம்பாக இருந்தது. நாளடைவில் நிலத்தின் மேற்பகுதி கொஞ்சங் கொஞ்சமாகக் குளிர்ந்து இறுகிற்று; புல், பூண்டு முதலிய தாவரங்களும், பிற உயிர் வகைகளும் தோன்றி வளரலாயின. ஆனால், நிலம் எல்லாவிடங்களிலும் உள்ளும் புறமும் முழுமையாகக் குளிர்ந்து இறுகவில்லை.

"நிலத்தின் மேற் பரப்பிலிருந்து ஏறக்குறைய ஐம்பது கல் தொலைவு வரை நிலப்பகுதி குளிர்ந்து இறுகியிருக்கின்றது. அதற்குக் கீழே இரண்டாயிரம் கல் தொலைவு வரை உருகிய கற் குழம்பு எந்நேரமும் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. அது, கொதிக்கும் வெந்நீரின் வெப்பத்தைப் போல இருபது மடங்குக்கும் அதிகமான வெப்ப முடையது" என, எரிமலை ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

நிலத்தின் மேற்பரப்பு உலகின் எல்லாப் பாகங்களிலும் ஒரே மாதிரியாக இல்லை. சில இடங்களில் வன்மையாயும், வேறு சில இடங்களில் மென்மையாயும் இருக்கின்றன. தென் அமெரிக்காவின் மேற்குக் கரை முழுவதும் மென்மையாகவே யிருக்கின்றது. இவ்வாறு மென்மையான மேற் பரப்பையுடைய இடங்களே எரிமலைகள் தோன்றுவதற்குக் காரணமாக விளங்குகின்றன. எரிமலைகள் பெரும்பாலும் கடற்கரைகளை யடுத்தே காணப்படும்.

நிலத்தின் மேற்பரப்பு உறுதியாக இல்லாத இடங்களின் உட் பகுதியில் அழுத்தம் அதிகமாக ஏற்படும்பொழுது, அங்குள்ள கற்குழம்பும், காற்றும் வெளியே செல்ல வழி தேடுகின்றன. அப்போது அவை குமுறிக் கொந்தளித்து மலையின் மேல் மட்டத்தைப் பெயர்த்துக் கொண்டு வெளி வருகின்றன. இவ்வாறு வெளிவரும் அனல் குழம்பும், புகையுமே நமக்கு எரிமலையாகக் காட்சியளிக்கின்றன.

எரிமலைகள் வெடிக்குமுன் சில அறிகுறிகள் தோன்றும். அவ்வாறு தோன்றும்போது எரிமலைகளின் அருகே வாழ்வோர் இடம் பெயர்ந்து செல்வர். அறிகுறிகளின்றித் திடீரென வெடிக்கும் எரிமலைகளும் உண்டு.

எரிமலை இலேசாகக் குமுறி வெடிக்கும்போது சாம்பல், கொதித்துக் கொண்டிருக்கும் கற்குழம்பு, பெருங் கற்கள் முதலியன பேரிரைச்சலுடன் வெகு தொலைவிற்குத் தூக்கி எறியப்படும். எரிமலையின் வாயிலிருந்து கரிய மேகத்தைப் போல் புகை கிளம்பி வானவெளி எங்கும் நிறைந்துவிடும். எரி மலை வாயினுள் எரியும் தீயின் வெளிச்சம் மேக மண் டலத்தையும் எட்டும். அப்போது வான வெளியில் ஒரு தீப்பிழம்பு எரிந்து கொண்டிருப்பது போற் காணப்படும்.

எரிமலையின் வெடிப்பு மிகப் பெரியதாக இருந் தால், நிலத்தின் உட்பகுதியில் குமுறல் ஏற்பட்டு நில அசைவு ஏற்படுகிறது; கடல் நீர் பொங்கி எழுந்து ஊர்களை மூழ்கடிக்கின்றது; நில அசைவின் காரண மாகக் கடலின் நடுவிற் புதுத் தீவுகள் தோன்று கின்றன.

எரிமலையிலிருந்து வெளிவரும் தீக்குழம்பு ஆறு போலப் பெருக்கெடுத்து ஓடி, நாடு நகரங்களையும் உயிர்களையும் அழிக்கும். அது நன்றாகக் குளிர்ந்து விட்டால் வளமான மண்ணாக மாறி விடுகின்றது. ஆகவே, எரிமலை ஓய்ந்ததும் மக்கள் மறுபடியும் அங்குக் குடியேறிப் பயிர்த் தொழிலில் ஈடுபடு கிறார்கள்.

இத்தாலியில் நேபில்ஸ் நகருக்கு அருகிலுள்ள வெசூலியஸ், சிசிலித் தீவில் உள்ள எட்னா, ஜப்பானில் இருக்கும் பியூஜியாமா, மேற்கிந்தியத் தீவைச் சேர்ந்த மாண்ட் பீலி ஆகியன உலகில் எரி மலைகளாகும். இவை பல நாடு நகரங்களை அழித்து, ஏராளமான உயிர்களைக் கொள்ளை கொண்டிருக் கின்றன. இவற்றைத் தவிர நானூற்று முப்பது

பெரிய எரிமலைகள் எந்தச் சமயத்திலும் வெடிக்கக் கூடிய நிலையிருப்பதாகவும், சுமார் இரண்டாயிரம் எரிமலைகள் கொந்தளித்துக் கொண்டிருப்பதாயும், கடலுக்குள் எண்பது எரிமலைகள் இருக்கின்றன எனவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பியூஜியாமா எரிமலையால் ஏற்படும் அழிவு களுக்கு அஞ்சி, அதனருகே வாழும் ஜப்பானியர்கள் காகித அட்டைகளினலான வீடுகளில் வாழுகிருர்கள். விஞ்ஞான வளர்ச்சியின் பயனுக எரிமலை வெடிக்கப் போவதை இப்பொழுது முன் கூட்டியே அறிவித்து விடுகிருர்கள். அதனல் மக்களின் உயிர், உடை மைகள் பாதுகாக்கப்படுகின்றன.

பயிற்சிகள் :

1. விடை கூறு :
   1. எரிமலைகள் எவ்வாறு தோன்று கின்றன ?
   2. எரிமலைகள் எங்கு காணப்படும் ?
   3. எரிமலைகள் வெடிக்கும்பொழுது என்னென்ன வெளிப்படும் ?
   4. நில அசைவு எப்போது ஏற்படு கிறது ?
   5. எரிமலைகளால் ஏற்படும் அழிவுகள் யாவை ?

2. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது :

   விந்தை, தீப்பற்றி, கொள்ளை, பெருக்கெடுத்து, குமுறல், கொதித்து, அறிகுறி, காரணமாக, கொந்தளித்து, குழம்பு.

3. இவற்றைப் பிரித்து எழுது :

மேற் பரப்பு, மேக மண்டலம், வெந்நீர், வன்மை, மென்மை, பேரிரைச்சல், வானவெளி, தீப்பிழம்பு, உட்பகுதி, நானூறு.

4. தீ—இப்பொருளைக் குறிக்கும் வேறு பெயர்ச் சொற்களை எழுது.

# 17. மழையும் அதன் பயனும்



படம் 27.

கடல், ஆறு, ஏரி, குளம் முதலிய நீர் நிலைகளின் மேற் பரப்பிலுள்ள நீர், கதிரவனின் கிரணங்களால் வெப்பமடைந்து ஆவியாக மேலெழுகின்றது. இந்த ஆவி, "நீராவி" எனப்படுகிறது. நீராவியின் திரட்சி "முகில்" எனவும், "மேகம்" எனவும் பெயர் பெறுகின்றது.

வான வெளியில் வீசுங் காற்று, மேகங்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நகர்த்துகிறது. இவ்வாறு நகர்த்தப்படும் மேகங்கள் காடடர்ந்த உயர்ந்த மலைச் சிகரங்களை அடையும்போது, அவற்

றின் மீது குளிர் காற்றுப்படுகின்றது. உடனே, அவை சிறு சிறு துளிகளாக மாறி நிலத்தை அடைகின்றன. இத்துளிகளையே நாம் "மழை" என்கிறோம்.

காடு, பாலை முதலிய இடங்களிற் பெய்யும் மழை மனிதருக்குப் பயனுவதில்லை. மலைப் பகுதிகளிற் பொழியும் மழை, அங்கு இயற்கையாக அமைந்துள்ள மடுக்களையும், ஏரிகளையும் நிரப்பி, மாந்தர்க்குக் குடிநீர் கிடைக்க உதவுகின்றது. மலையுச்சிகளில் தோன்றும் அருவிகள் ஆறுகளாகத் திரண்டு, நாட்டின் ஊடே பாய்ந்து, நாட்டை வளமாக்குகின்றன. மிருதுவான பாறைகளிடையே விழும் நீர்த்துளிகள், அடியிலுள்ள கெட்டியான பாறை நிலத்தையடைகின்றது. இதுவே, பின்னர் ஊற்று நீராகப் பொங்கி உலகுக்கு உதவுகின்றது.

உலகிற் சில இடங்களில் மிகச் சிறிதளவு மழையே பொழிகின்றது. சில இடங்களில் அறவே மழை பொழிவதில்லை. மழை குன்றிய இவ்விடங்கள், மனித வாழ்க்கைக்குத் தகுதியற்ற வறண்ட மணல் வெளிகளாயிருக்கின்றன. இவற்றை நாம் "பாலை வனங்கள்" அல்லது "பாலை நிலங்கள்" என்கின்றோம்.

மழை வளங்குன்றிய பாலை நிலங்களில் வாழும் மக்கள், தங்களுக்கும் தங்களின் கால் நடைகளுக்கும் தேவையான நீரைப் பெறுவதற்காக அடிக்கடி இடம் பெயர்ந்து செல்கின்றனர்; இவ்வாறு இடம் பெயர்ந்து செல்லும் மக்களையே நாம் "நடோடிகள்" எனக் கூறுகின்றோம். இவர்கள் வாழுமிடங்களிற் போதிய நீரில்லாமையால் இவர்கள் உழவராக முடியவில்லை.

5

நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டிருந்த பலர், மழை வளமுடைய மலைப் பகுதிகளிலும், ஆற்றங்கரைப் பகுதிகளிலும் குடியேறி உழவராயினர். இவ்வாறு தோன்றிய குடியிருப்புக்களே நாளாவட்டத்தில் கிராமமாகவும், பட்டணமாகவும், நகரமாகவும் வளர்ந்தோங்கின என்பதை வரலாறு உணர்த்துகின்றது. இதிலிருந்து மழைவளமே மாந்தரின் நாகரீக வளர்ச்சிக்கு மிக முக்கிய காரணமாய் விளங்குகின்றது என்பதை உணரலாம்.

கடற்கரையை அடுத்துள்ள மலைப்பகுதிகளில் அதிக மழை பெய்கிறது. அதிக மழையால் அருவிகள் பல தோன்றுகின்றன. அவை ஆறுகப் பெருக்கெடுத்து ஓடும்போது நீர் வீழ்ச்சிகளை உண்டாக்குகின்றன. மனிதர் அவற்றைப் பயன் படுத்தி மின்சாரம் எடுக்கிறார்கள். மின்சாரம் எண்ணற்ற வழிகளில் நமக்குப் பயன்படுகின்றது. மழைவளம் இல்லையேல் இதனை நாம் பெற முடியாது.

மழையால் நாம் பெறும் பயன்கள் பல. மழை நீர், நிலத்தின் வெப்பத்தைத் தணிக்கின்றது; குப்பை கூளங்களையும் அழுக்குகளையும் அகற்றி நிலத்தின் மேற் பரப்பைத் தூய்மை செய்கின்றது; புல், பூண்டு, செடி, கொடி, மரங்களை வளரச் செய்து உயிரினங்களுக்கு வாழ்வளிக்கின்றது; பயிர்த் தொழில் செழிக்கச் செய்கின்றது; உயிரினங்கள் அனைத்திற்கும் பருகும் உணவாகவும் அமைகின்றது.

மழை பெய்யா விட்டாலும் உயிர்களுக்கு அழிவு உண்டாகின்றது; பெரு மழையாலும் அழிவு நேருகின்றது. மழை பெய்யாமலும் கெடுக்கும், பெய்தும் கெடுக்கும்! மழை பெய்யும் பருவ நிலையை

மாற்றித் தாம் விரும்பியபோது, விரும்பிய இடத்தில் மழையைப் பெய்விக்க விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர்.

"மழை முகங் காணாத பயிரும் தாய் முகங் காணாத பிள்ளையும்" "மழை பெய்ந்தோடி மறைந்தாற்போல" என்பன மழையின் இயல்பைக் குறிக்கும் பழமொழிகளாகும்.

பயிற்சிகள் :

1. விடை கூறு : 1. மழை பெய்தும் கெடுக்கும், பெய்யாமலும் கெடுக்கும் என்பதன் கருத்து யாது ?
2. மழை எங்கு அதிகமாகப் பெய்கின்றது ?
3. பாலை நிலங்கள் என்பன யாவை ?
4. யாரை நாடோடி மக்கள் என்கிறோம் ? அவர்களின் வாழ்க்கை முறை யாது ?
5. மழையின் பயன்கள் என்னென்ன ?
6. நீராவி என்பது யாது ?

2. ஒவ்வொரு சொல்லுக்கும் வேறு இரு பொருள் கூறு :
மேகம், வானம், காடு, வெப்பம், தூய்மை, அழிவு, இயல்பு.

3. பிரித்து எழுது : காடடர்ந்த, மற்றோர், பழமொழி, பருவநிலை, மேற்பரப்பு, குடியேறி, நீரில்லாமை, நாடோடி, வானவெளி.

4. மழையைக் குறிக்கும் வேறு மூன்று பழமொழிகளைப் பிரித்து எழுது.

# 18. தீ மிதி விழா

ரப்பர்த் தோட்டங்களிலும், சில சிற்றூர்களிலும் வாழும் தமிழ் மக்கள், தாங்கள் வாழும் இடங்களில் அம்மன் கோயில்கள் கட்டித் தீ மிதி விழா நடத்து கின்றார்கள். மலாயாவில் பல பகுதிகளில் தீ மிதி விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறும்.



படம் 28.

தீ மிதி விழா, திரௌபதி அம்மன் பொருட்டு நடைபெறுவதாகத் தோட்டப் புற மக்கள் கூறு கிறார்கள். சில தோட்டங்களில் பாரதக் கதையைப் படித்து இவ் விழாவைக் கொண்டாடுவதும் உண்டு.

திரௌபதி, வட இந்தியாவிலுள்ள பாஞ்சால மன்னனின் மகள். இவளைப் பாஞ்சாலி எனவும் கூறுவர். இவள் அத்தினபுரியை ஆண்ட பாண்டவர் களின் மனைவியாவாள்.

பாஞ்சாலி பிறந்து வளர்ந்த பாஞ்சாலத்திலோ, பாண்டவரை மணந்து வாழ்ந்த அத்தினபுரியிலோ இவளுக்குக் கோயில்களில்லை; தீ மிதி விழாவும் இல்லை. பாஞ்சாலியின் கதையைக் கூறும் பாரதத்திலும் இவை பற்றிக் கூறப்படவில்லை.

ஆகவே, திரௌபதி அம்மன் கோயில்களென இன்று அழைக்கப்படுகின்றவை உண்மையில் திரௌபதிக்காக எழுப்பப்பட்டவை அல்ல என்ற முடிவிற்கே நாம் வரவேண்டியதிருக்கிறது. அவ்வாறாயின் இக் கோயில்கள் யாருக்காகக் கட்டப்பட்டன?



படம் 29. தீ மிதித்தல்.

பண்டை நாளிற் கண்ணகியைப் போன்று கணவனைப் பிரிந்து வாழ விரும்பாத வீரமகளிர் பலர் தமிழகத்தில் வாழ்ந்தனர். அவர்கள் தங்கள் கணவன்மார் இயற்கையாக நோய்வாய்ப்பட்டு இறந்

தாலும், போரில் வீரமரண மெய்தினலும், நாடு பகைவர் கையில் சிக்கிக் கொண்டாலும், தங்கள் மானத்தையும், பெருமையையும் நிலைநாட்டத் தீ வளர்த்து அதிற் பாய்ந்து உயிர் துறப்பார்கள். இதனை அந்த நாளில், "தீக் குளித்தல்" என்று போற்றினர். இவ்வழக்கமே பிற்காலத்தில் "உடன் கட்டை ஏறுதல்" என மாறிற்று.

மதுரையை ஆண்ட பூதப் பாண்டியனின் மனைவியான கோப்பெருந்தேவி, தன் கணவன் இறந்ததும் இவ்வாறு தீப் பாய்ந்து மாண்டதைப் புறநானூறு என்னும் சங்க இலக்கியம் நமக்குக் கூறுகின்றது. இங்ஙனம் தீப் பாய்ந்து மாண்ட மகளிரைப் பெருமைப் படுத்துவதற்காகத் தமிழகத்தில் பல தீப் பாய்ந்த அம்மன் கோயில்கள் கட்டப்பட்டன. தீ மிதித்தல் என்பது, தீப் பாய்ந்த வீரமகளிரின் வீரச் செயலை நினைவுறுத்தவே நிகழுகிறது.

"இந்தத் தீப் பாய்ந்த அம்மன் கோயில்களே, கல்லா மக்களின் அறிவீனத்தால் திரௌபதி அம்மன் கோயில்களாக மாறிவிட்டன" எனப் பேராசிரியர் மா. இராசமாணிக்கனர் அவர்கள் தக்க சான்றுகளோடு விளக்கிக் கூறுகிறார்கள்.

தீப் பாய்ந்த வீர மகளிர் வரலாறுகள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனல், அவர்களின் நினைவுச் சின்னங்களாக உள்ளவை தீப் பாய்ந்த அம்மன் கோயில்களே. இக்கோயில்களைத் திரௌபதி அம்மன் கோயில்களெனக் கூறாமல், தீப் பாய்ந்த அம்மன் கோயில்களென அழைத்து, நம் தமிழ்க்குல வீரமகளிரைப் பெருமைப்படுத்துவோமாக.

பயிற்சிகள் :

1. விடை கூறு : 1. பேராசிரியர் இராசமாணிக்கனார் அவர்கள் கூறுவதென்ன ?
   2. பாரதக் கதை என்பது யாது ?
   3. தீ மிதித்தல் எதன் பொருட்டு நிகழுகிறது ?
   4. தீப் பாய்ந்த அம்மன் - திரௌபதி அம்மன், இவ்விரு தொடர்களில் எது சரியானது ? ஏன் ?
   5. தீக்குளித்தல் என்பது என்ன ?

2. ஒவ்வொரு தொடரையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது :

   தோட்டப்புரு, ஒருமனப்பட்டு, வழிவழியாக, இத்தகைய, பண்டைநாளில், உடன்கட்டை.

3. பிரித்து எழுது : சிற்றூர்களில், தீப் பாய்ந்து, வீர மகளிர், நினைவுறுத்த, அறிவீனம், பண்பாடமைந்த, புறநானூறு, வீர மரணம்.

4. கொண்டாடுவது, பார்ப்பது, போன்ற கருத்து முடிவுறாத வினைச் சொற்களை வினை எச்சங்கள் என்பர். இவை கொண்டாடுவது (முடியாது) பார்ப்பது (சிறந்தது) என ஒவ்வொரு வினைமுற்றைக் கொண்டு முடிவுறும். இப் பாடத்திலிருந்து ஐந்து வினையெச்சங்களை எடுத்து எழுது.

# 19. குடை பேசுகிறது

"மழைக்கும், வெயிலுக்கும் உதவுகின்ற என்னை நீங்கள் குடை என்கிறீர்கள்." நான் குவிந்த அமைப்புடன் விளங்குவதால், "குடை" என்னும் காரணப் பெயரைப் பெற்றேன். கி. மு. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே எகிப்து, சீனு, இந்தியா முதலிய நாடுகளில் என்னைப் பயன்படுத்தி வருகின்றனர்.



படம் 30. குடை.

தகிக்கும் வெயிலிலிருந்தும், கொட்டும் மழையிலிருந்தும் தங்களைக் காத்துக் கொள்ள எண்ணிய பழங்கால மாந்தர், இலைகளையும், ஓலைகளையும், மரப் பட்டைகளையும், தோல்களையும் தலைக்கு மேலே உயர்த்திப் பிடித்துக் கொண்டனர். கைகள் நோவெடுத்த போது அவற்றைக் கோல்களிற் பொருத்தி உயர்த்திப் பிடித்தனர். இவ்வழக்கமே நான் தோன்றுவதற்குக் காரணமாயிற்று எனலாம்.

பழந்தமிழ் நாட்டில் என்னைத் தாழை, பனை, தென்னை முதலியவற்றின் ஓலைகளால் அமைத்தனர்; சீனாவில் பிரம்பும், எண்ணெய் தோய்த்த பட்டுத் துணியும் கொண்டு உருவாக்கினர். சீனாவிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் நான் ஐரோப்பாவிற்குக் கொண்டு செல்லப்பட்டேன். ஆரம்ப நாட்களில் ஐரோப்பிய ஆடவர் என்னைக் கையில் ஏந்திச் செல்வது இழிவாகக் கருதப்பட்டது. ஆதலால், பெண்கள் மட்டுமே என்னை எடுத்துச் சென்றனர். பின்னர், என் பயனை உணர்ந்து, ஆடவர்களும் என்னைப் பயன்படுத்தினர்.

கீழை நாடுகளின் மன்னர்கள் தங்களின் செங்கோலுக்கும், வெற்றிக்கும் உரிய சின்னமாக என்னைக் கொண்டதால் நான், "வெண் கொற்றக் குடை" எனச் சிறப்பிக்கப்பட்டேன். மலாயாவிலுள்ள சுல்தான்மாரும் தங்களுடைய பிறந்த தின விழாப் போன்ற சிறப்பு நாட்களில், என் நிழலின் கீழ் நின்று மரியாதை அணிவகுப்பைப் பார்வை இடுவதில் மகிழ்ச்சி கொள்ளுகிறார்கள் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள். இதனால், என் மதிப்பு உயர்ந்தது. ஆகவே அரசர்களின் மதிப்புக்கு உரியவர்களாயிருந்த மதத் தலைவர்களும் தங்களின் உயர்வுக்கு எடுத்துக் காட்டாக என்னைக் கொண்டனர். இதன் விளைவாக யான் இந்துக்களின் திருக்கோயில்களில் அழகிய பெரிய வடிவமுடன், அரிய ஓவிய வேலைப் பாடுகளோடு காட்சி யளிக்கின்றேன். கோயில்களில் நடைபெறும் விழா நாட்களில் என்னை நீங்கள் பார்த்திருக்கக்கூடும்.

கி. பி. பதினேழாம் நூற்றாண்டு வரை யான் கனமாகவும், எப்போதும் விரிந்த நிலையிலும் இருந்

தேன். பிறகு, பதினெட்டாம் நூற்றூண்டின் பிற் பகுதியில் எஃகுக் கம்பிகளை இணைத்து, விரிக்கவும் மடக்கவும் கூடிய நிலையில் கரிய துணியைப் பொருத்தி என்னை உருவாக்கினூர்கள்.

இன்று உலகின் பல பாகங்களிலிருந்தும் கண் கவர் வனப்புகளில் காகித உடை தரித்தும், கரிய பருத்தி ஆடையுடுத்தியும், பலவகைப் பட்டுடைகள் அணிந்தும், பல நிறங்களில் உலா வந்து கொண்டி ருக்கின்றேன். மலாயாவில் மூங்கிலும், தாழையும் ஏராளமாக வளருகின்றன. ஆகவே, இங்குள்ள வர்கள் முயன்றூல் என்னைத் தோற்றுவிக்கலாம்.

பர்மிய மக்கள் என்னை அதிகமாக விரும்பு கின்றனர். பர்மிய மகளிர் நானில்லாவிடில் வெளியிற் செல்ல மாட்டார்கள். நீங்கள் வெளியிற் செல்லும் போது என்னை மறவாமற் கொண்டு செல்லுங்கள். நான் மழையையும், வெயிலையும் தடுப்பேன்; கடிக்க வருகின்ற நாயையும், முட்ட வருகின்ற முரட்டு மாடு களையும் தடுப்பேன்; கைக்கு அழகாகவும் ஊன்று கோலாகவும் விளங்குவேன். கவிகை என்பது எனக் குரிய மற்றொரு பெயராகும்.

பயிற்சிகள்:

1. விடை கூறு:
   1. குடை செய்யுமுன் வெயிலையும் மழையையும் தடுக்க மக்கள் உபயோகப் படுத்தியவை யாவை?
   2. விரிக்கவும் மடக்கவும் கூடிய குடையை எப்பொழுது செய் தனர்?
   3. பழங்காலக் குடைக்கும் தற்காலக் குடைக்கும் உள்ள வேற்றுமை யாது?

4. கோயில்களில் உள்ள குடைகள் எவ்வாறு காட்சி அளிக்கின்றன ?
5. குடையின் உபயோகங்கள் யாவை ?

2. குடை என்பது குவிந்திருக்கின்ற காரணத்தால் ஏற்பட்ட காரணப் பெயர் ஆகும்—இவ்வாறு சில பொருள்களுக்கு ஏற்பட்ட காரணப் பெயர்களையும், அவற்றிற்குரிய காரணங்களையும் எழுது.

3. ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

கீழை, ஊன்று கோல், உலா, அரிய, செங்கோல், ஏந்தி, தகிக்கும், பொருந்திய, தாழை.

# 20. மனிதரின் தோழன்

வரலாற்றுக் காலத்திற்கு முன்பு நமது முன்னோர் காடுகளில் வேடர்களாக வாழ்ந்து வந்தனர். பின்னர் அலைந்து திரிவதை விட்டுக் கூட்டம் கூட்டமாக ஓரிடத்தில் குடியேறி வாழக் கற்றுக் கொண்டார்கள்.

கூட்டமாக வாழ முற்பட்ட பின்னரும் அவர்கள் வேட்டையாடுவதை விட்டுவிடவில்லை. வேட்டையிற் சிக்கிய பெரிய விலங்குகளைக் கொன்று, அவற்றின் குட்டிகளைக் கொல்லாமல் வளர்த்தனர். அவ்வாறு வளர்க்கும்போது தங்களுக்கு அடங்காத கரடி, புலி, முதலிய உயிரினங்களைக் கொன்றனர்; அடங்கி நடந்த ஆடு, மாடு, கழுதை, குதிரை, ஒட்டகம், பன்றி முதலியவற்றைப் பிரியமுடன் வளர்த்தனர்.

மனிதரால் வளர்க்கப்பட்ட உயிரிகள் வளர்ந்து பல்கிப் பெருகின. வேட்டையில் விலங்குகள்

கிடைக்காதபோது, வீட்டு விலங்குகளிற் சிலவற்றை அறுத்துப் புசித்தனர். நாளடைவில் விலங்குகளின் பாலைப் பருகவும், அவற்றின் தோல்களை ஆடையாக உடுத்தவும் அறிந்தனர்.

ஆடு, மான் முதலிய சிற்றுயிர்களைக் கொன்று தின்று வாழ்ந்த கொடு விலங்குகளுள் நாய்மட்டும் மனிதனோடு தோழமை கொண்டு, அவன் கட்டளைக் குக் கீழ்படிந்து நடக்கலாயிற்று.

வரலாற்றுக் காலத்துக்கு முன்பே நாய் மனித னுக்கு நெருங்கிய நண்பனாகவும், மெய்க் காப்பாளனாக வும் விளங்கி வந்துள்ளது. வேடராயிருந்த மக்கள் இடையராக மாறி, பின்னர் நாய் அவர்களின் ஆட்டு மந்தைகளைக் காவல் புரிந்து வந்தது. இதனா லேயே,

> "வாலைக் குழைத்துவரும் நாய்தான்—அது
> மனிதர்க்குத் தோழனடி பாப்பா"

எனப் பாரதியார் நாயைச் சிறப்பித்துள்ளார்.

தற்காலத்தில் காட்டுப் பன்றி வேட்டைக்குச் செல்வோர் வேட்டை நாய்களை உடனழைத்துச் செல் வது போல், பழங்கால மாந்தரும் வேட்டைக்குச் சென்ற போது நாய்களை யும் கூட்டிச் சென்றனர். அவை வேட்டைக்குரிய விலங்குகள் தப்பி ஓடி விடாமல் மடக்கின; புதர் களில் மறைந்திருந்த உயிர்களை மோப்பத் தாலறிந்து குரைத்து



படம் 31. புல்டாக்.

உணர்த்தின; மறைவிடத்திலிருந்த உயிர்கள் வெளிப்படும் போது அவற்றைக் கவ்வி இழுத்து வந்தன.



படம் 32. அல்சேஷியன்.

பண்டை நாள் முதல் எல்லா நாடுகளிலும் நாய்களை பேணி வளர்க்கப் பட்டுள்ளன. பழங்கால எகிப்தியரும், இந்தியரும் அவற்றைத் தெய்வங்களாகப் போற்றி வந்துள்ளனர்.

நாய்களிற் பலவகையுண்டு. உலக நாடுகளின் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப அவற்றின் உருவ அமைப்பிலும் தோற்றத்திலும் பற்பல மாறுதல்கள் காணப்படுகின்றன.

அல்சேஷியன், செயின்ட் பெர்னூர்டு, புல்டாக் ஆகியன நாய்களுள் சிறந்தவை எனப் போற்றப் படுகின்றன. அல்சேஷியன் கோநாயைப் போன்ற தோற்றமுடையது; பார்வைக்கு அச்சமூட்டக் கூடியது; மிகக் கூரறிவுடையது. இது போலீஸாருக்குப் பயந்து தலை மறைவாகத் திரியும் குற்றவாளியைக் கண்டு பிடித்துப் பேருதவி புரிகிறது. செயின்ட் பெர்னூர்டு, பனி நாடுகளில் காணமல் போனவர்களைக் கண்டு பிடித்துக் காப்பாற்ற உதவுகிறது. புல்டாக், திருடர்களை உயிரோடு தப்பிச் செல்ல விடாது.

பெல்ஜியத்தில் உள்ள நாய்கள் வண்டியிழுக்கின்றன. எஸ்கிமோக்கள் தங்களின் சக்கரமில்லாத "ஸ்லெட்ஜ்" வண்டிகளை நாய்களைக் கொண்டு இழுக்



படம் 33. செயின்ட் பெர்னர்டு.

கச் செய்கின்றனர். சில இடங்களில் கடைகளுக்குச் சென்று சாமான்கள் வாங்கிவரவும், முதியோர்களுக்கும், குருடர்களுக்கும் வழிகாட்டி அழைத்துச் செல்லவும் நாய்கள் பயன்படுத்தப் படுகின்றன. நாய் வளர்ப்பில் மேலே நாட்டு மக்கள் மிகுந்த அக்கறை செலுத்துகின்றனர்.

செய்ந்நன்றி மறவாத சீரிய குணத்துக்கு நாய் ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. இந்நற் குணத்தை அது தன் செய்கைகளால் மனிதருக்கு உணர்த்துகின்றது.

பயிற்சிகள் :

1. விடை கூறு:
   1. நாயினிடமிருந்து மனிதன் அறிந்து கொள்ள வேண்டியது எது ?
   2. எஸ்கிமோவருக்கு நாய்கள் எவ்வாறு உதவுகின்றன ?
   3. நாயைத் தெய்வங்களாகப் போற்றிய மக்கள் யாவர் ?

4. அல்சேஷியன் நாய் எப்படிப் பட்டது?
5. பழங்கால மாந்தருக்கு நாய்கள் எவ்வாறு உதவின?

2. நாயின் இனத்தைச் சேர்ந்த இரு விலங்குகளின் பெயர்களை எழுது.

3. நாயைப் பற்றிய பழமொழிகளில் ஐந்தை எழுது.

4. நாயின் நன்றியறிதலை விளக்கும் கதை ஒன்றைப் பத்து வாக்கியங்களில் எழுது.

## 21. மராமத்து இலாகா

*மக்களின் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத சாலைகள், நீர்த் தேக்கங்கள் முதலியவற்றை அமைக்கும் பொறுப்பை மராமத்து இலாகா மேற்கொள்கின்றது.*

*பொறிஇயல் வல்லுநர்கள், கட்டட வரைப்படம் எழுதுவோர், கட்டடச் சிற்பிகள் முதலியோர் மராமத்திலாகாவில் பணி புரிகின்றனர். மராமத்திலாகாவின் பணிகள் பலதரப்பட்டவை.*

*சாலை அமைப்பு, மராமத்திலாகாவின் பணிகளுள் ஒன்றாக விளங்குகின்றது. தூசி எழும்பாத காங்கிரீட் சாலைகள், முண்டுக்கல் போட்டு உருளை யந்திரத்தால் அழுத்தி அடிப்படையிட்ட தார்ச் சாலைகள், மக்கிக் கற்களும் மணலும் கலந்து போட்டு, மேற்புறத்தில் கீல் ஊற்றப்பட்ட சாலைகள்,*



படம் 34. சாலை அமைத்தல்.

மக்கிக் கற்சாலைகள், மண் சாலைகள் ஆகியன இடத்ற்கும் போக்கு வரத்திற்கும் ஏற்றவாறு அமைக்கப் படுகின்றன. மலாயாவில் நெடுஞ் சாலைகளும், நகரங்களின் ஊடே செல்லும் தெருக்களும் தார் ஊற்றப்பட்ட கற் பாறைகளாகவே யிருக்கின்றன. பெருங் கற்சாலைகளும், மண் பாதைகளும் கிராமப் புறங்களில் அமைக்கப்படுகின்றன.

கட்டடங்கள் கட்டுதல் மராமத்திலாகாவின் இரண்டாவது பணியாக அமைகின்றது. அரசாங்க அலுவலகங்கள், மருத்துவ நிலையங்கள்; ஊர்க் காவல் நிலையங்கள், தீயணைப்பு நிலையங்கள், மலாய்க் கிராமங் களுக்கேற்ற ஆரம்பப் பாடசாலைகள்; நகர்ப்புறங் களுக்கேற்ற ஆங்கில உயர்நிலைப் பள்ளிகள், மலாய் மொழிக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்,

பல்கலைக் கழகப் படிப்பிற்கு உறுதுணையான ஆராய்ச்சி நிறுவனங்கள், இராணுவக் குடியிருப்புக் கள். அரசாங்க ஊழியர்களும் அதிகாரிகளும் குடியிருப்பதற்கேற்ற இல்லங்கள் முதலியவற்றை மராமத்திலாகாவே கட்டிப் பராமரிக்கிறது.

விமானத் துறைகளை அமைத்தல் மராமத்திலா காவின் மூன்றுவது பணியாகும். கோலாலம்பூரிலும், பினங்கிலும் பெரிய விமானத்துறைகளிருக்கின்றன. இவை, அயல் நாடுகளிலிருந்து வரும் மிகப் பெரிய விமானங்கள் தங்கிச் செல்வதற்கேற்ற வசதிகள் நிரம்பியவை. மலாக்கா, ஈப்போ, தைப்பிங்-அலோர்ஸ்டார், கோத்தாபாரு, குவாந்தான் ஆகிய ஊர்களில் உள்நாட்டுப் போக்குவரவுக்குத் தகுந்த சிறு சிறு விமானத் திடல்கள் உண்டு. இவையும் மராமத்திலாகாவால் அமைக்கப்பட்டு பாதுகாக்கப் படுகின்றன.

நெடுஞ் சாலைகளிடையே யுள்ள இரும்பு பொதிந்த காங்கிரீட் பாலங்களும், இரும்புப் பாலங் களும், மரப் பாலங்களும் மராமத்திலாகாவால் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாலங்கள் கட்டுதல் இவ்விலாகாவின் நாலாவது பெரும் பணியாகும்.

நீர்த் தேக்கங்கள் அமைத்து, இரசாயன முறைப் படி நீரைச் சுத்தஞ் செய்து, மக்களுக்குக் குடிநீர் வழங்குதல் இவ்விலாகாவின் ஐந்தாவது பணியாகும்.

சாலை அமைப்பிற்குரிய இயந்திர மண் வெட்டி கள், குழி வெட்டும் இயந்திரங்கள், இரும்பு உருளை கள், கற்களைப் பொடி செய்யும் இயந்திரங்கள், தார் பீப்பாய்கள், பாரந் தூக்கிச் செல்லும் வண்டி

கள், பாலங்களுக்குரிய இரும்புகள், குடிநீர் சேமித்து வைத்தற்குரிய தொட்டிகள், கட்டட வேலைக்குரிய தளவாடங்கள் முதலியன கோலாலம்பூரிலுள்ள மராமத்திலாகாப் பண்டகசாலையில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

சிமெண்டு, மணல், காங்கிரீட், கற்கள், நிலக்கீல், மண்ணின் உறுதிப்பாடு முதலியவற்றை ஆய்ந்தறியும் ஆராய்ச்சிப் பகுதியும் மராமத்திலாகாவில் உண்டு. இந்த ஆராய்ச்சியின் பயனாலேயே உறுதியான கட்டடங்களையும், சாலைகளையும் மலாயாவில் அமைக்க முடிகின்றது.

மலாயாவின் மொத்த வருவாயில் ஏறக்குறைய நாற்பது சதவிகிதம் மராமத்திலாகா வேலைகளுக்குச் செலவிடப்படுகிறது.

பயிற்சிகள் :

1. விடை கூறு : 1. மராமத்திலாகாவில் பணி புரிகின்றவர் யாவர் ?

2. கிராமப் புறங்களில் உள்ள சாலைகள் எப்படிப் பட்டவை ?

3. நகர்ப் புறச்சாலைகள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன ?

4. சிறு விமானத் திடல்கள் எங்கெங்கு உண்டு ?

5. மராமத்திலாகாவின் பண்டகசாலையில் என்னென்ன பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் ?

2. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது :

தளவாடங்கள், சேமித்து, உறுதியான, சேக-ரித்து, உருளைகள், இரசாயன, போக்குவரவு.

3. பொருள் கூறு : பொறுப்பு — பொருப்பு, இரு — இறு, பொறி — பொரி, துறை — துரை, இறங்கி — இரங்கி.

4. எதிர்ச் சொற்கள் கூறு : பலதரம், ஒன்ருக, கிராமம், ஆரம்பம், உயர்நிலை, ஊழியன், இறங்கி, சேமித்து.

5. கல்லூரிகள், சாலைகள், ஈப்போ முதலியன இடங்களைக் குறிக்கும் பெயர்களாகும். இப்பாடத்திலிருந்து இடங்களைக் குறிக்கும் பத்துப் பெயர்ச் சொற்களை எடுத்து எழுது.

## 22. தற்கால நாள் காட்டியின் கதை



மலாயாவில் நடைபெறும் சமயச் சார்பான விழாக்களுள் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் புத்தாண்டுப் பிறப்பின்போது உறவினர்க்கும், நண்பர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துச் செய்திகளை அனுப்பி மகிழ்கின்றனர்.

புத்தாண்டு பிறப்பதற்கு முன்பே அச்சகங்களிலும், புத்தகக் கடைகளிலும் பலவகை நாள்காட்டிகள் விற்கப்படுகின்றன. அவற்றுட் சில கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்களோடு விளங்குகின்றன; சில இயற்கையின் எழிலைச் சித்தரிக்கும் நிழற் படங்களோடு காட்சியளிக்கின்றன; சில திரைப்பட நடிக நடிகையரின் உருவப் படங்களைத் தாங்கி நிற்கின்றன.

பெரிய வணிகர்கள் தங்களுடைய தொழில் விளம்பரங்களுடன் நாள் காட்டிகளைத் தங்களின் வாடிக்கைக்காரர்களுக்கு இலவசமாக வழங்குகின்றனர். இதன் மூலம் வணிகர்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்குமிடையே வாணிகத் தொடர்பு பெருக வழி ஏற்படுகின்றது.

ஆங்கிலம் உலகப் பொதுமொழியானது போல, ஆங்கிலேயரால் புழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்ட நாள்காட்டி அல்லது காலண்டர் முறையும், உலகப் பொதுமையாக விளங்குகிறது. எனினும், ஆண்டிற்குரிய நாள்களின் எண்ணிக்கை நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது.

பாபிலோனியரும் அராபியரும் ஓர் ஆண்டிற்கு 354 நாட்கள் எனவும், சுமேரியரும் சீனரும் 360 நாட்கள் எனவும், எகிப்தியர் 365 நாட்கள் எனவும், இந்தியர் 366 நாட்கள் எனவும் கணக்கிட்டனர்.

# கிருஷ்ண புத்தகசாலை,

25, பத்து ரோடு....கோலாலம்பூர்.




## JUNE

| SUN | MON | TUE | WED | THUR | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

அராபியர், சீனர், எகிப்தியர், இந்தியர் ஆகியோர் இன்னும் இவ்வாறே கணக்கிடுகின்றனர்.

ரோமானியர் ஆண்டிற்குப் பத்து மாதங்கள் எனக் கணக்கிட்டனர். அவர்கள் கணக்கின்படி ஆண்டின் முதலாம் மாதம் மார்ச்; இறுதி மாதம் டிசம்பர். பின்னர், பாபிலோனியர்களைப் பின்பற்றிப் பன்னிரண்டு மாதங்களும் 355 நாட்களும் ஏற்படுத்திக் கொண்டனர். இம்முறையில் ஆண்டு தோறும் பத்து நாட்கள் குறைந்து கொண்டே வந்ததால் மதகுருமாரின் விழா அறிவிப்பில், பிழைகள் நேர்ந்தன. அவர்கள் கோடைக் காலம் என அறிவிக்கும்போது மாரிக் காலமாயிருக்கும்! மாரிக்காலம் என அறிவிக்கும்போது வசந்த காலமாயிருக்கும்!

ஜூலியஸ் சீசர், ரோமாபுரியின் மன்னரானதும் குருமாரின் கால அறிவிப்பிற் பிழைகளிருப்பதை யுணர்ந்து, "சொரிஜினஸ்" என்னும் எகிப்திய வான நூலறிஞர் மூலம் அதனைத் திருத்தி யமைத்தார். இதனால் குருமாரின் கால அறிவிப்புப் பிழைகள் அகன்றன. ஆண்டிற்கு 365 நாட்கள் என்னும் எகிப்தியக் கணக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதையே, "ஜூலியன் காலண்டர்" என அழைத்தனர். இன்று நடைமுறையில் உள்ள நாள்காட்டி அல்லது காலண்டருக்கு இதுவே அடிப்படையாகும்.

ஜூலியஸ் சீசர் அதிகாரத்துக்கு வருமுன் மார்ச் மாதம்தான் ஆண்டின் முதலாம் மாதமாயிருந்தது. சீசர் அதை மாற்றி ஜனவரியை ஆண்டின் முதலாம், மாதமாக ஆக்கினர். ஜூனுக்கு அடுத்த மாதம், "கியுண்டியஸ்" என அழைக்கப்பட்டது. சீசர் அதை "ஜூலை" எனத் தம் பெயரால் அழைக்கச் செய்தார்.

பூமி கதிரவனை ஒரு முறை சுற்றி வர 365 நாட்கள் 5 மணி 48 நிமிடம் 49-7 விநாடிகள் அல்லது $365\frac{1}{4}$ நாட்கள் ஆகின்றன, எனக் கணக்கிட்டிருக்கின்றார்கள். இதனையே நாம் ஓர் ஆண்டு என்கின்றோம். ஆனால், ஜூலியன் காலண்டரின்படி 365 நாட்களே கணக்கிடப்பட்டன. இதனால் ஒவ்வோர் ஆண்டிலும் கால் நாள் மீதப்பட்டது. இக் குறையைப் போக்க நான்காண்டுகளுக்கு ஒரு முறை ஒரு நாளைக் கூட்டி, அந்த ஆண்டுக்கு 366 நாட்கள் என ஏற்பாடு செய்தனர். இந்த ஆண்டையே நாம் "லீப்" ஆண்டு என்கின்றோம். இக் கணக்கு முறை கி. மு. 46ல் நடைமுறைக்கு வந்தது.

ரோமாபுரியிலிருந்த மதகுருமார் நான்காண்டுகளுக்கு ஒருமுறை ஒரு நாளை அதிகமாக்குவதற்குப் பதிலாக, மூன்றாண்டுகட்கு ஒரு முறை ஒரு நாளை அதிகமாக்கினர். "அகஸ்டஸ்" மன்னர் ஆட்சியின் போது இப்பிழை கண்டு பிடித்துத் திருத்தப்பட்டது. ஜூலியஸ் சீசர் தம் பெயரால் ஒரு மாதத்தை ஏற்படுத்திக் கொண்டது போல, அகஸ்டஸ் மன்னரும் ஜூலைக்கு அடுத்த "செக்ஸ்டிலியஸ்" என்னும் மாதத்தை, "ஆகஸ்ட்" எனத் தம் பெயரால் அழைக்குமாறு செய்தார்.

ஜூலியன் காலண்டர் அமைப்பில் ஆண்டொன்றுக்குப் பதினொரு நிமிடங்கள் கூடுதலாக உள்ளன என்பது, கிரிகோரி என்பவராற் கண்டறியப்பட்டது. இத்தவறைப் போக்க நானூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஓர் ஆண்டில் மூன்று நாட்களைக் குறைத்துக் கொள்ள வேண்டுமெனக் கிரிகோரி முடிவு செய்தார். இம்முடிவை மேலை நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இப்போதுள்ள காலண்டரின் அமைப்பு முறையும் அறிஞர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. அவர்கள் இதனைச் சிறிது மாற்றியமைக்க விரும்புகின்றனர். இந்த விருப்பத்தின் விளைவாக இத்தாலியப் பாதிரியான "ஆபே மார்க்கோ" என்பவர் உலகக் காலண்டர் ஒன்றை அமைத்திருக்கிறார். இவர் கணக்கின்படி ஓர் ஆண்டிற்குரிய நாட்கள் 364 ஆகும்; மீதமாயுள்ள ஆண்டின் இறுதி நாட்கள் உலகப் பொதுமுறை நாட்களாகும்.

உலகக் காலண்டரில் ஒவ்வோர் ஆண்டும், ஜனவரி முதலாம் நாளில் ஞாயிற்றுக் கிழமையன்று தொடங்கும்; டிசம்பர் முப்பதாம் நாளில் சனிக்கிழமையன்று முடிவுறும். காலப் போக்கில் இம்முறை நடைமுறைக்கு வரக்கூடும்.

நாள்காட்டி அல்லது காலண்டரின் பயன்கள் பல. அவை நமக்குத் தேதியையும், கிழமையையும், மாதத்தையும், ஆண்டையும் காட்டுகின்றன; அரசாங்க விடுமுறை நாட்களை அறிவிக்கின்றன; சமய சம்பந்தமான விழாக்கள் நடைபெறும் நாட்களைத் தெரிவிக்கின்றன. அவை, சுருக்கிய அளவிலான பஞ்சாங்கமாகவே திகழ்கின்றன.

**பயிற்சிகள்:**

1. விடை கூறு:
   1. தற்போதைய காலண்டர் முறை யாரால் உருவாக்கப்பட்டது?
   2. ஜூலியன் காலண்டர் முறை உலகெங்கும் பரவியது எவ்வாறு?
   3. லீப் ஆண்டு என்பது எவ்வாறு ஏற்பட்டது?

4. உலகக் காலண்டர் முறையை அமைத்தவர் யார்?
5. உலகக் காலண்டரின் அமைப்பு முறை எவ்வாறு இருக்கிறது?
6. சமய குருமார் அறிவித்த கால அறிவிப்பிற் பிழைகள் நேர்ந்தது ஏன்?

2. பிரித்து எழுது: புத்தாண்டு, தத்தம், அச்சகம், நடிக நடிகையர், உருவப்படம்.

3. எதிர்ச் சொற்கள் தருக: முக்கிய, பெருக, குரு, மாரி காலம், திருப்தி, குறைத்து.

4. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது:

விளைவாக, மாற்றியமைக்க, திருப்தி, வசந்தகால, எண்ணிக்கை, வாடிக்கை, இலவசமாக, வாழ்த்து.

## 23. ஒட்டகம்

மலாயா மக்கள் பசு, எருமை முதலியவற்றை விரும்பி வளர்ப்பது போல, அரேபிய மக்கள் ஒட்டகங்களைப் பிரியமுடன் வளர்க்கிறார்கள். தென் அமெரிக்காவிற் பெரு, பொலிவியா ஆகிய இடங்களில் வாழும் அல்பக்கா, லாமா ஆகிய இரு விலங்குகளும் ஒட்டக இனத்தைச் சேர்ந்தவையாகும்.

ஒட்டகம் இருவகைப்படும். ஒன்று அரேபிய இனம்; மற்றொன்று பாக்டீரிய இனம்.

அரேபிய இன ஒட்டகம் ஒற்றைத் திமிலுடையது; பழுப்பு நிறமானது; ஏறக்குறைய ஏழடி உயரமிருக்கும். இது அரேபியா, சிரியா, பாகிஸ்



படம் 35. அரேபிய இன ஒட்டகம்.

தானம், இராசபுதனம் முதலிய வெப்ப நாடுகளிலும், வெப்பப் பாலை வனங்களிலும் வாழ்கின்றது.



படம் 36. பாக்டீரிய இன ஒட்டகம்.

பாக்டீரிய இன ஒட்டகம் இரட்டைத் திமில் உடையது; கரிய அல்லது சிவந்த பழுப்பு நில்



படம் 37. அல்பக்கா.



படம் 38. லமா.

முடையது; அரேபிய இன ஒட்டகத்தை விடச் சிறியது. இது மத்திய ஆசியா, வட சீன, கோபி

பாலைவனம் முதலிய குளிர் நாடுகளிலும், குளிர்ப் பாலைவனங்களிலும் வாழ்கின்றது.

ஒட்டகம் மந்த குணமுடையது. அது ஓர் அழகில்லாத விலங்கு. நீண்ட கழுத்து, நீண்ட கால்கள், குவிந்த திமில்கள், அங்குமிங்கும் சாய்வது போன்ற நடை ஆகியன ஒட்டகத்தின் தோற்றத்தை விகாரமாக்கிக் காட்டுகின்றன. அதன் உறுப்புக்கள் பாலை நில வாழ்க்கைக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன.

ஒட்டகத்தின் கால்களில் தடித்த தோலால் மூடப்பட்ட அகன்ற பாதங்கள் உள்ளன. ஆகவே, அது மணலில் நடக்கும்போது அதன் கால்கள் புதைவதில்லை. பாதத்தினடியில் தடித்த தோலுமிருப்பதால் அதன் கால்களை வெப்பமும் தாக்குவதில்லை.

ஒட்டகத்தின் மூக்குத் துவாரங்களிலும், கண்ணிமைகளிலும் நீண்ட மயிர்கள் உண்டு. அதன் மூக்குத் துவாரங்கள் தேவையானபோது மூடிக் கொள்வதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. ஆகவே பாலைவனத்தில் மணற் புயல் வீசும் போது, அது தன் மூக்குத் துவாரங்களையும் கண்களையும் இறுக மூடிக் கொள்ளும். மூக்குத்துளைகளிலும் கண்ணிமைகளிலும் உள்ள மயிர்கள் மணல் உள்ளே புகாதவாறு காக்கின்றன.

பாலைவனத்தில் வளரும் முட்செடிகளையே ஒட்டகம் தின்னுகிறது. அரேபியர் பொதி சுமக்கும் ஒட்டகங்களுக்கு, பேரீச்சம் பழங்களையும், பார்லியையும் தீனியாக வைப்பார்கள். இந்தியாவில் வாழும் ஒட்டகங்கள் வேப்பிலையை விருப்பமாகத் தின்னும்.

ஒட்டகத்தின் இரப்பை வியப்பானது. அதில் நூற்றுக் கணக்கான சிறு சிறு பைகள் இருக்

கின்றன. அது நீரருந்தும் போது இப்பைகள் அனைத்தும் நிரப்பப்படுகின்றன. இவ்விதம் நிரப்பி வைக்கப்படும் நீர், பாலைவனப் பயணத்தில் நீர் கிடைக்காதபோது அதற்கு உதவுகின்றது.

ஒட்டகம் தன் தேவைக்கு அதிகமான தீனியை உட்கொள்ளும். மிகுதியாக உட்கொள்ளப்படும் தீனி கொழுப்பாக மாறித் திமிலை அடைகின்றது. இரை கிடைக்காத பாலைவனப் பிரயாணத்தின்போது இக் கொழுப்புச் சிறிது சிறிதாகக் கரைந்து ஒட்ட கத்தைக் காக்கிறது.

கடல் போன்ற பரந்த மணல் வெளியை இரவு பகல் ஓய்வின்றி மெதுவாகக் கடந்து செல்ல இஃது உதவுவதால், இதனைப் "பாலைவனக் கப்பல்" என அழைக்கிறார்கள்.

அரேபியர்கள் ஒட்டகங்களைச் சிறந்த செல்வங் களாகக் கருதுகிறார்கள். அவர்கள் ஒட்டகப் பாலைக் குடிக்கிறார்கள்; அதன் இறைச்சியைப் புசிக்கிறார் கள்; அதன் மயிரைக் கொண்டு துணி நெய்கிறார்கள்; அதன்மீது வாணிபப் பொருள்களை ஏற்றிக்கொண்டு நீண்ட தொலைவு சென்று மீளுகிறார்கள். ஒட்ட கங்கள் இல்லையேல் அரேபிய மக்களின் வாழ்வு இருண்டு விடும். இதனாலேயே, "ஒட்டகம் ஆண்ட வனால் அளிக்கப்பட்ட அருட்கொடை" என அரேபியர் கூறுகின்றனர்.

வட இந்தியாவிலுள்ள இராஜபுதனத்தில் ஒட்டக வண்டிகளும் காணப்படுகின்றன.

பயிற்சிகள் :

1. விடை கூறு: 1. ஒட்டகம் ஏன் விகாரமாகக் காணப் படுகிறது?

2. ஒட்டகத்தின் உணவுகள் யாவை?
3. பாக்டீரியா இன ஒட்டகம் எங்கு வாழ்கிறது?
4. ஒட்டக வண்டிகளை எங்கே காண லாம்?
5. ஒட்டகத்தை ஏன் பாலைவனக் கப்பல் எனக் கூறுகிறார்கள்?
6. ஒட்டக இனத்தைச் சேர்ந்த வேறு விலங்குகள் யாவை? அவற்றை எங்கே காணலாம்?
7. ஒட்டகங்கள் அராபியருக்கு எவ் வாறு உதவுகின்றன?
8. திமில் - இதனைக் குறிக்கும் வேறு சொல் யாது?

2. பிரித்து எழுது : வெப்பப்பாலை, குளிர்ப்பாலை, மந்த குணம், பாதத்தினடியில், கண் ணிமை, மணற் புயல், முட்செடி, அருட்கொடை.

## 24. எலியின் தந்திரம்

மலையின் அடிவாரத்தில் கட்டப்பட்டிருந்த ஒரு கோயிலில் ஓர் அரசமரம் இருந்தது. அதில் வெவ் வேறு வகையாக வாழ்க்கை நடத்தும் பூனை, கீரி, ஆந்தை, எலி ஆகிய நான்கு உயிரிகள் வாழ்ந்து வந்தன. பூனை மரத்தினடியில் உள்ள பொந்திலும் ஆந்தை மரத்தின் மேலுள்ள பொந்திலும் வசித்து வந்தன. கீரியும், எலியும் மரத்தினடியில் உள்ள வேர் களின் கீழே வளை தோண்டி வாழ்ந்து வந்தன.

பூனை நாள்தோறும் கோயிலுக்கு அருகேயுள்ள தோட்டத்திற்குச் சென்று அங்கு வாழும் பறவைகளையும், எலிகளையும் வேட்டையாடும். பூனைக்குப் பயந்து வாழும் ஆந்தையும் கீரியும், அது வெளியிற் சென்ற பிறகுதான் இரைத்தேடப் புறப்படும். பூனை, கீரி, ஆந்தை ஆகிய மூன்றும் எலியைக் கொன்று தின்பவை. ஆகவே, இவை யாவும் வெளியிற் போன பிறகுதான் எலி வளையை விட்டு வெளியில் வரும்.

ஒரு நாள் காட்டிலுள்ள வேடன் ஒருவன், காட்டுப் பன்றியைப் பிடிப்பதற்காகத் தோட்டத்திற் கண்ணி வைத்திருந்தான். பூனை வழக்கம் போலத் தோட்டத்திற்குட் சென்றபோது, வேடன் கட்டியிருந்த கண்ணியில் மாட்டிக் கொண்டது.



படம் 39. பூனை சிக்கியிருக்கும் கண்ணியை எலி கடித்துக் கொண்டிருக்கிறது.

பூனை கண்ணியிற் சிக்கிக் கொண்டிருப்பதைத் தூரத்திலிருந்து கவனித்த எலி, அச்சமின்றி வளையை விட்டு வெளியில் வந்தது. எலி வளையை விட்டு வருவதைப் பார்த்த ஆந்தையும், கீரியும் அதைப் பிடிக்கத் தொடர்ந்தன.

எலி தனக்கு நேரவிருக்கும் ஆபத்தை எண்ணி நடுங்கிற்று. அது தன் வளைக்குத் திரும்பிச் செல்லவும் இயலவில்லை. ஆகவே, அது கீரியையும், ஆந்தையையும் ஏமாற்ற எண்ணி, வலையிற் சிக்கியிருந்த பூனையினருகே சென்று அதைப் பார்த்து, "ஐயா, நீர், என் எதிரியானாலும் இந்தக் கண்ணியிற் சிக்கி வருந்துவதைப் பார்க்க என் மனம் இரங்குகிறது. உம்மால் எனக்கு ஆபத்து விளையுமென்று அஞ்சுகிறேன். இல்லையெனில், இந்நேரம் இக்கண்ணியைத் துண்டித்து உம்மை விடுவித்திருப்பேன்! என்றது.

அதைக் கேட்ட பூனை "எலியே, நீ, மிகவும் நல்லவன்; என்னை இத்துன்பத்திலிருந்து காப்பாற்றி விட்டால், நீ என்னுடைய சிறந்த நண்பனாவாய்; உன்னை நான் ஒன்றும் செய்யேன்" என்றது. இவையிரண்டும் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்த ஆந்தையும் கீரியும் ஏமாற்றத்துடன் திரும்பின.

பூனை எலியைப் பார்த்து, "பொழுது புலரும் நேரம் நெருங்கி விட்டது. சீக்கிரம் கண்ணிகளை அறுத்து என்னை விடுவி" என்றது. உடனே எலி, பூனை சிக்கியிருந்த கண்ணியை அணுகி, அதைக் கடிப்பது போற் பாசாங்கு செய்து கொண்டே வேடன் வருகையை எதிர் நோக்கியிருந்தது.

பொழுது விடிந்தது. வேடன் கொலைக் கருவிகளோடு அங்கு வருவதைக் கண்ட எலி, பூனை சிக்குண்டிருந்த கண்ணியின் சுருக்கைப் பலமாக இறுக்கிவிட்டு ஓட ஆரம்பித்தது. பூனை, "இது நியாயமா?" என எலியைக் கேட்டபோது, எலி, "சூழ் நிலையின் காரணமாகப் பகைவன் கூட நண்பனாவான். ஆனால் அந்த நட்பு உண்மையாயிராது! நீடிக்கவும் மாட்

டாது", என மொழிந்து விட்டு அங்கிருந்து ஓடிற்று. பூனே, வேடன் கையிற் சிக்கி மாண்டது.

பயிற்சிகள் :

1. விடை கூறு: 1. பூனே, எலியிடம் 'இது நியாயமா' என்று கேட்டபோது, எலி கூறியதென்ன ?
2. ஆந்தையையும், கீரியையும் ஏமாற்ற எலி செய்த தந்திரம் என்ன ?
3. வேடன் எங்கே, எதற்காகக் கண்ணி அடித்தான் ?
4. எலியைக் கொன்று தின்னும் உயிரிகள் யாவை ?
5. எலி எதற்காகப் பாசாங்கு செய்து கொண்டிருந்தது ?

2. ஒவ்வொரு சொல்லேயும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமை :

கண்ணி, சூழ்நிலே, சுருக்கு, பாசாங்கு, வளே, எதிரி, இரை, உயிரிகள்.

3. ஒருமையாக எழுது :

உயிரிகள், வந்தன, தொடர்ந்தன, திரும்பின, அவை, இவை, எவை, நல்லவை.

4. இவற்றிற்கு எதிர்ச் சொற்கள் கூறு :

மாண்டது, நட்பு, ஆரம்பித்தது, புலர்ந்தது, காடு, வாழ்ந்தது.

# 25. பிழைக்கிற பிள்ளை

(ஓரங்க நாடகம்)




## காட்சி—1

களம் : விசய நகரத்தில் தெனாலிராமன் வீடு.

பாத்திரங்கள் : தெனாலிராமன், கமலம், தெனாலிராமன் மைத்துனன் கசேந்திரன்.

காலம் : மாலை நேரம்.

கசேந்திரன் : அக்கா, இரண்டு மூன்று நாட்களாக வீட்டுக்குள்ளேயே இருப்பது என்னவோ போலிருக்கிறது. சற்று நேரம் வெளியில் போய்விட்டு வருகிறேன்.

கமலம் : தம்பீ, நம் ஊரை விட விசய நகரம் மிகப் பெரியது. நீயோ ஊருக்குப் புதியவன். உன் அத்தான் வரட்டும்.

கசேந்திரன் : என்ன அக்கா இப்படிச் சொல்கிருய். நான் என்ன மதலே பேசும் குழந்தை என்ரு எண்ணுகிருய்?

கமலம் : அதற்கில்லே தம்பீ, உன்னேத் தனியாக அனுப்பினல் உன் அத்தான் கோபித்துக் கொள்வார்.

கசேந்திரன் : கோபப்பட மாட்டார். அரண்மனேக் குச் சென்ற அவர் எத்தனே மணிக்கு வருவா ரென்று தெரியாது; நான் நாளேக்கே ஊர் திரும்ப வேண்டும்.

கமலம் : சரி, சரி. போய்ச் சீக்கிரம் இருட்டுவதற் குள் திரும்பி விடு.

கசேந்திரன் : சரி அக்கா!

## காட்சி—2

களம் : அரண்மனேப் பூந்தோட்டம்.

பாத்திரங்கள் : காவலாளிகள், கசேந்திரன்.

காலம் : மாலே நேரம்.

(கசேந்திரன் அரண்மனேப் பூந்தோட்டத்தின் அழகைக் கண்டு வியக்கின்ருன். பிச்சிப் பூவின் மணம் கசேந்திரனேக் காந்தம் போல் இழுக் கின்றது.)

**கசேந்திரன் :** *(அரண்மனைக் காவலரிடம்) ஐயா, வணக்கம்.*

**காவலர் :** *வணக்கம். நீ யாரப்பா ?*

**கசேந்திரன் :** *அரண்மனை விகடகவி இருக்கிருரே அவர் மைத்துனன் நான்.*

**காவலர் :** *யாரு? தெனுலிராமன் மைத்துனனு நீ?*

**கசேந்திரன் :** *ஆமாம். அவர் மைத்துனன் தான். எனக்குக் கொஞ்சம் பிச்சிப் பூ வேண்டும். பிச்சிப் பூ என்ருல் எனக்குக் கொள்ளை ஆசை!*

**காவலர் :** *ஆசையைப் பாரு ஆசை! நீ இந்த ஊருக்குப் புதியவன் போலிருக்கிறது! அரண்மனைத் தோட்டப் பூவை யாரும் பறிக்க முடியாது. விரைவாக ஓடி விடு.*

**கசேந்திரன் :** *நீங்கள் மனது வைத்தால்................!*

**காவலர் :** *அப்பனே, நாங்கள் என்ன செய்ய முடியும்? மன்னருக்குத் தெரியாமல் பூவைப் பறித்தால் எங்கள் தலைகள் பறி போய்விடும்!*

**கசேந்திரன் :** *சரி, சரி. என்னுல் உங்கள் தலை போக வேண்டா. நான் வருகிறேன்.*

## காட்சி—3

**களம் :** பூந்தோட்டம்.

**பாத்திரங்கள் :** கசேந்திரன், காவலர்கள்.

**காலம் :** அந்தி நேரம்.

(கசேந்திரன் திருட்டுத்தனமாகப் பூந்தோட்டத்திற்குள் புகுந்து பூக்களைப் பறிக்கிருன். அரவங் கேட்டுக் காவலர் அவனைப் பிடித்துக் கொள்கின்றனர்.)

(காவலர் கசேந்திரனை இழுத்துக் கொண்டு போவதை எதிரே வந்த தெனலிராமன் பார்த்து நடந்ததை அறிந்து கொள்கிருன்.)

தெனலிராமன் : (*தன் மைத்துனனைப் பார்த்து*) *ஏண்டா முட்டாள் இப்படிச் செய்தாய்? பிழைக்கிற பிள்ளைக்குப் பிச்சிப் பூ நஞ்சா? போடா போ!*

(கசேந்திரன் தன் மைத்துனன் சொன்ன குறிப்பைப் புரிந்து கொண்டு பிச்சிப் பூக்கள் முழுவதையும் தின்று விடுகின்ருன்.)

## காட்சி—4

களம் : அரண்மனை அவை.

பாத்திரங்கள் : அரசர், தெனலிராமன், கசேந்திரன், காவலர்.

தெனலிராமன் : *அரசே, வணக்கம்.*

அரசர் : *யாரது? தெனலிராமனு? வா. உன் மைத்துனன் செய்த திருட்டு வேலையைப் பார். விசய நகர ஆட்சியில் திருட்டுக் குற்றத்திற்கு என்ன தண்டனை தெரியுமா?*

தெனலிராமன் : *தெரியும் அரசே........ஆனுல்........!*

அரசர் : *நீ, ஒன்றும் குறுக்கே பேச வேண்டா! சாமர்த்தியமாகப் பேச எண்ணுதே! நீ சொல்வதற்கு எதிர்மாருகவே செய்யப் போகிறேன்!*

தெனலிராமன் : *நிச்சயமாகவா அரசே?*

அரசர் : *ஆம். அதிலென்ன சந்தேகம்?*

**தெனலிராமன் :** நல்லது அரசே, இந்தத் திருட்டுப் பயலுக்கு நம் தேச வழக்கப்படி மரண தண்டனை விதியுங்கள்!

**அரசர் :** இராமா, என் பேச்சைக் கொண்டே என்னை மடக்கி விட்டாயே? உன் சொல்லுக்கு மாறாகவே நான் செய்வதாகச் சொன்னதால் இவனுக்கு விடுதலை அளிக்கிறேன். இவனை இங்கிருந்து ஓடிப்போகச் சொல்லு.

**தெனலிராமன் :** அரசே! இனி அவனை இருக்கச் சொன்னாலும் இருப்பானா? அவன் முகத்தைப் பாருங்கள்! பயத்தால் பாதி செத்துவிட்டான்!

**அரசர் :** சரி. அவனை அழைத்துப் போய் வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி அனுப்பு.

**தெனலிராமன் :** உத்தரவுப்படி, அரசே வணக்கம்.

பயிற்சிகள் :

1. விடை கூறு:
   1. காவலாளிகள் கசேந்திரனை அரண்மனைக்கு இழுத்துச் சென்றது ஏன்?
   2. தெனலிராமன் தன் மைத்துனனுக்குச் சொன்ன குறிப்பு மொழி யாது?
   3. தெனலிராமன் தன் மைத்துனனை எவ்வாறு தப்புவித்தான்?

2. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது :

   மழலை, விகடகவி, பறிபோய், அரவம், நஞ்சு, எதிர்மாறாக, குறுக்கே, விடுதலை, புத்திமதி.

# செய்யுட்பகுதி

## 1. வாக்குண்டாம்

### 1. உதவி பெறுபவரின் இயல்பு

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப் போல் காணுமே—அல்லாத
ஈரம் இலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

### 2. மானமுடையவரின் இயல்பு

உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ—கல்தூண்
பிளந்து இறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

### 3. நல்லாரைக் காண்பது நல்லது

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே ;—நல்லார்
குணங்களுரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

### 4. உருவத்தைக் கண்டு ஏமாறலாகாது

மடல் பெரிது தாழை; மகிழ் இனிது கந்தம் ;
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா ;—கடல் பெரிது
மண்நீரும் ஆகாது; அதன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகிவிடும்.

### 5. மரம் போல்வான்

கவை ஆகாக் கொம்பு ஆகிக் காட்டு அகத்தே நிற்கும்
அவை அல்ல நல்ல மரங்கள் ;—சபை நடுவே
நீட்டு ஓலை வாசியா நின்றான் ; குறிப்பு அறிய
மாட்டா தவன்நல் மரம்.

12.10.65/L



# MALAYA THESIA VACHAKAM

DISTRIBUTORS:
KRISHNA BOOK DEPOT,
25, BATU ROAD, KUALALUMPUR.

COPY RIGHT:
ASHOK & COMPANY, KUALALUMPUR.